
தமிழ்

# மின்னல்

07.01.2005 ரூபா 20

## 9.0 2004

- சுனாமி - ஆய்வு
- குளோனிங் - மருத்துவம்
- மரணத்திலிருந்து மீண்ட அனுபவம்
- ரூபா 50000/- பரிசுப்போட்டி
- யாழ்ப்பாணமும் பிச்சைக்காரரும்
- வாரம் ஒரு விஞ்ஞானி
- காலக் கணக்கீடு
- ஆங்கிலம் - கல்வி
- கதம்பம்
- பார்த்ததும் கேட்டதும்
- இன்னும் ஏராளம்.....


தமிழர் தாயகத்தின் முதல்தர அறிவியல் வார இதழ்

படிப்பதற்கு நேரத்தை ஒதுக்கிக்கொள்
அது அறிவின் வாயில்


# தமிழ் மின்னல்

841, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Ph. 021 4591571

07.01.2005 வெள்ளிக்கிழமை



ஆசிரியர்
யேசுதாஸ் சந்திரசேகரர்

இணை ஆசிரியர்
சபீத்தா. B

உதவி ஆசிரியர்கள்
திருக்குமார் சரூபன்
தர்மராசா தாரகாந்தன்

ஒருங்கிணைப்பாளர்
திருக்குமார் சரூபன்

நிர்வாகக்குழு உறுப்பினர்கள்
ஆ.தீபன்
வி.ரிஷாந்தி
பு. ரம்யா
ப. ரமேஷ்சுதன்
பா. தயாளினி
லோ. சர்மிலா
சி. நளாயினி

வெளிக்களப்பணி
வ. வனிதா
மை. மிருணா

கணனிப்பணி
இ. கிருஸ்ண வேணி
யோக. ரதீபன்
பா. ஜவகர்லால் நேரு
கு. சுஜாத்தா
பா. சத்தியா


இது ஒரு ${}^{\circ}$ AMSTECH வெளியீடு

## வாசகர்களே!!!

தேவை என்ற ஒன்றே புதிய உருவாக்கங்களுக்கு வழிவகுக்கின்றது என்பது உலக உண்மை. உலகம் முழுவதும் வாழும் இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இன்று அடிப்படைத் தேவையாகக் கருதப்பட வேண்டிய ஒன்று அறிவு.

இன்று அறிவியற் பெருக்கமானது, உலகம் முழுவதும் அதிகரித்து, உலகமய மாதல் நடைபெற்று வரும் இச்சந்தர்ப்பத்தில், உலகத்தோடு எந்தத் தொடர்பினையும் ஏற்படுத்த முடியாதபடி ஆங்கில அறிவின் பின்னடைவும்........

தகவல் தொழில்நுட்பமானது வளர்ச்சி பெற்று, உலகம் வேறுபட்ட பாதையொன்றிற் சென்றுகொண்டு இருக்கும்போது அதன் அடிப்படையறிவு கூட இன்றியும்.....

ஒவ்வொருவரும் வித்தியாசமான வேறுபட்ட தொழில்களுக்கான முழுமையான கல்வியினைப் பெறக்கூடிய நிலையில் எமது மக்கள் ஆரம்பக்கல்வியையே பெறமுடியாத நிலையிலும்.......

உலக இணைய வலையமைப்பானது, உலகம் முழுவதும் வாழும் மக்களை இணைத்துப் பல்வேறு இயலுமைகளை வழங்கும் போது, அத்தகைய பயன்பாடுகள் ஏதுமின்றியும்...

பின்தங்கிப் போகும் எமது சமுதாயத்தினைக் கட்டியெழுப்ப, இந்த அறிவியல் இதழ் துணைபுரியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

யேசுதாஸ் சந்திரசேகர
ஆசிரிய

வாரம் ஒரு சிந்தனை

# வாழ்க்கையில் முன்னேற..

இன்று இலங்கையிலுள்ள ஏராளமான இளைஞர்களின் பிரச்சினை என்ன? படிப்பிற்கேற்ற வேலைவாய்ப்பின்மை. திறமையிருந்தும் சொந்தமாகத் தொழில் செய்வதற்குப் போதிய பொருளாதார வசதியின்மை.

இதற்கான தீர்வு என்ன?

பொருளாதார முன்னேற்றமின்றி இளைஞர்களுடைய வாழ்வு முன்னேறும் என்று எந்த வகையில் எதிர்பார்க்க முடியும்?

இதுவே எமது சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு இளைஞனதும் யுவதியினதும் கருத்தாகும். ஆனால் உலகத்தில் நடந்தது என்ன?

ஏழை விறகுவெட்டியின் மகன் ஆபிரகாம் லிங்கன், அமெரிக்காவின் குடியரசுத் தலைவரானார். வறுமையில் வாழ்ந்த ஒரு புத்தக வியாபாரியின் மகன் சாமுவேல் ஜோன்சன், ஒரு உலகம் போற்றும் இலக்கிய மேதையும் ஆங்கில அகராதியின் ஆசிரியருமானார். ஏழை செருப்புத் தைக்கும் தொழிலாளி மகன் ஸ்டாலின், ரஷ்ய அதிபரானார். பண்ணைத் தொழிலாளியின் மகன் ஹென்றி போர்ட், உலகம் போற்றும் விஞ்ஞானியாக மாறினார். வறுமைக்கோட்டில் வாழ்ந்த படகு செய்பவரின் மகன் தோமஸ் அல்வா எடிசன், விஞ்ஞானியாக வளர்ந்து அளப்பெரிய சாதனைகள் புரிந்தார். இத்தாலியில் ஒரு மீனவரின் மகனான ஹரிபால்டி, அந்நாட்டை வழிநடத்தினார். சாதாரண மெழுகுவர்த்தி வியாபாரியின் மகன் பெஞ்சமின் பிராங்லின்.

பணம் இவர்களுடைய வாழ்கையை முன்னேற்றவில்லை. இவர்களுடைய சாதனைக்குப் பின், பணம் இருக்கவில்லை. பணம் அவர்களுடைய நோக்கமாக இருக்கவில்லை. பணம் அவர்களுக்கு ஒரு பொருட்டாக இருக்கவில்லை.

குறிக்கோள் அவர்களுடைய வாழ்வில் இருந்தது. தன்னம்பிக்கை அவர்களுடைய இதயத்தில் நிலை கொண்டிருந்தது. விடாமுயற்சி அவர்களுடைய செயற்பாடாக இருந்தது. திட்டமிடல் இவர்களுடைய வெற்றிக்கு வழி சமைத்தது.

இளைஞர்களே, நீங்களும் இன்னொரு ஆபிரகாம் லிங்கன் ஆகவோ, ஹென்றி போட் ஆகவோ, தோமஸ் அல்வா எடிசன் ஆகவோ, பெஞ்சமின் ராங்ளின் ஆகவோ மாறுவதற்கு பணம் ஒரு தடையல்ல.

குறிக்கோள், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, மற்றும் முறையான திட்டமிடல். வையே போதும். எழுந்திருங்கள்....

- ஆசிரியர்

- கடந்த வருடத்தின் மிகப்பெரும் அழிவு
- இலட்சக்கணக்கான மனித உயிர்களைப் பலிகொண்ட அனர்த்தம்
- ஆயிரம் அடிகள் உயரத்தில் தரையிலிருந்து செல்லும் அலை
- ஆறாவது அறிவைப் பயன்படுத்தும் மிருகங்கள்
- தகர்த்தெறியப்பட்ட இராணுவமுகாம்களும் போர்க்கப்பல்களும்

# சுனாமி

கடந்த 26.12.2004 அன்று அதிகாலையில் சுமத்திரா, அந்தமான் தீவுகளுக்கருகாமையில் 9.0 றிச்டர் அளவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியினைத் தொடர்ந்து ஏற்பட்ட கடற் கொந்தளிப்பே சுனாமி.

சுனாமி என்பது துறைமுக அலைகள் என்று பொருள் பெறும் ஒரு ஜப்பானியச் சொல். ஜப்பானிய மீனவர்கள் ஒரு நாள் கடலுக்குப்போய் எந்த ஆபத்துமோ அதற்கான அடையாளமோ தெரியாத நிலையில் திரும்பிவந்தபோது அவர்களது துறைமுகம் முழுமையாக அழிக்கப்பட்டிருந்ததாகவும் அதற்குக் காரணமான கடல் அலைக்குச் சுனாமி என்று வைத்து இந்தப் பெயர் பிரபல்யம் ஆனதாகச் சில சான்றுகள் தெரிவிக்கின்றன.

சுனாமி என்பது கடலில் உருவாகின்ற சாதாரண அலைகளில் இருந்து சற்றுவேறுபட்டது, தொடர்ச்சியானது, அதிகவேகமானது, அதிகவல்லமையுள்ளது, அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. கிடையாகத் தொடராகச் செல்லும் இந்த அலைகள் நடுக்கடலிற் பொதுவாக எத்தகைய வித்தியாசமான தோற்றத்தினையோ தாக்கத்தினையோ ஏற்படுத்துவதில்லை. கரையில் வேகமாக உயரமாக தரையில் உட்புகுகிறது.

சுனாமி ஏற்படுவதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். பூமியதிர்ச்சி, எரிமலை அல்லது நிலச்சரிவுகள் என்பவற்றை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். பொதுவாகச் சொல்வதாக இருந்தால் கடலுக்கடியில் நிலத்தில் ஏற்படும் வேகமான அசைவே சுனாமி உருவாகுவதற்கான காரணமாகும். இது ஒரு தனி அலையாக அல்லாமல் தொடர் அலையாக இருக்கும். இதன் அலை நீளம் 100 கிலோ மீற்றருக்கு அதிகமாகவும் இருக்கலாம். இதன் முதலாவது அலையானது அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கமுடியாது.

சுனாமியானது அது ஏற்படுத்துகின்ற இடத்திலிருந்து 500 கிலோமீற்றருக்கு அதிகமான தூரத்திலுள்ள ஓரிடத்திற் கூட உயிர்ச் சேதத்தையோ பொருட்சேதத் தையோ ஏற்படுத்தலாம். சுனாமியின் வேகம் 800 கிலோமீற்றருக் அதிகமாகவும் காணப்படலாம்.

சுனாமி அலை கரையை அடைகின்றபோது கீழ்ப்பகுதி வேக குறைகின்றபோது மேற்பகுதியில் நீர்மட்டம் அதிகரிக்கிறது. வேகமாக உயரமா செல்கின்ற இந்த நீர் தரையிற் புகுந்து பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன் பா

சேதத்தையும் ஏற்படுத்துகிறது. சுனாமி அலைகள் பொதுவாக 3 மீற்றர் உயரத்துக்கு மேல் தரையில் உயர்வதில்லை. ஆனாலும் சில சந்தர்ப்பங்களில் ஆயிரம் அடிக்கு அதிகமாகக்கூட அலைகள் எழலாம்.

நிலநடுக்கத்தையோ பூகம்பத்தையோ எதிர்வுகூற முடியாது. ஆனால் இவை சுனாமி அலைக்கான இயற்கையான ஓர் அடையாளமாகும். எனவே பூமியதிர்வு ஏற்படுகின்ற நேரங்களில் சுனாமிக்கான தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். அதேபோன்று கடல் நீர் மட்டத்தில் ஏற்படுகின்ற திடீர்மாற்றம் சுனாமிக்கு ஓர் அடையாளமாக இருக்கலாம். சுனாமி அலையானது கடலைச் சென்றடைகின்ற ஆறுகள் ஊடாக வேகமாகப்பரவும் என்பதால் இவ் அலை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் இவ் ஆறுகளையும் தவிர்த்தல் அவசியமாகும். பூமியதிர்வு மற்றும் சுனாமி ஆகியன அதிகமாக ஏற்படுகின்ற இடங்களில் 72 மணிநேரங்களுக்கான உணவு, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்கள் சேகரித்து வைப்பது வழக்கமாகும்.

பூமியதிர்வு, மற்றும் சுனாமி போன்றவற்றினைக் காட்டுமிருகங்கள் உணர்ந்து கொள்ளக்கூடிய ஆறாவது அறிவினைப் பெற்றிருப்பதாக இதுவரை சொல்லப்பட்டு வந்தது. தற்பொழுது நடந்து முடிந்த சுனாமியானது இதனை ஊர்ஜிதம் செய்வதாகவே தெரிகிறது. அதாவது இலங்கையிலே 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சுனாமியினாலே கொல்லப்பட்டபோதும் காட்டுப்பகுதிகளிலிருந்து கூட எந்தவொரு மிருகமும் இதில் பாதிக்கப்படவில்லை என்பது வெளிப்படை.

கடந்தவருடத்தின் இறுதியில் ஏற்பட்ட சுனாமித் தாக்கத்தினால் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் தெற்காசிய நாடுகளிலே கொல்லப்பட்டும் பல லட்சம் பேர் காணாமற்போயும் இருக்கும் இச்சந்தர்ப்பத்தில், நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அல்லது செயற்படவேண்டிய சில விடயங்களும் இருக்கத்தான் செய்கின்றன. பூமியதிர்வு ஏற்பட்டு இரண்டு மணிநேரங்களிற்குப் பின்பாக நடைபெற்ற இந்த அனர்த்தம், முன்னதாகவே தெரிந்திருந்தும் இழப்புகளைத் தவிர்க்காதது வேதனையானது. இனிவரும் காலங்களிலாவது இவ்வாறான அனர்த்தத்தைத் தவிர்ப்பதற்குப் போதுமான வழிமுறைகள் மற்றும் ஆராய்ச்சிகள் மூலம் நடவடிக்கை எடுப்பது காலத்தின் கட்டாயமாகும்.

சுனாமியைப்பற்றி உறுதிப்படுத்தப்படாத சில தகவல்களையும் நாம் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும். தற்போது ஏற்பட்ட சுனாமியானது ஏற்பட்ட இடம், விதம், தகவல் பரிமாறப்படாத்தன்மை, அழிவுகள், மற்றும் நிவாரணப்பணி என்ற பேரில் அமெரிக்காவினால் ஏற்படுத்தப்படும் அவதானிப்பு என்பன அமெரிக்காவினால் சுனாமியை போரியல் ஆயுதமாகப் பயன்படுத்துவதற்கான ஒத்திகையோ? என்ற சந்தேகத்தினைப் பலரிடம் ஏற்படுத்துகிறது.

எப்படியோ, சுனாமி எமது தேசத்தை நிலைகுலையச்செய்துவிட்டது. 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும், இலட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்தும் உள்ளனர். ஆனாலும் ஏராளமான இராணுவ, மற்றும் கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டதும், இராணுவ, கடற்படைத் தளங்கள் பல முழுமையாக தாக்கப்பட்டதும் போர்க்கப்பல்கள் அழிக்கப்பட்டதும், இலங்கையில் சமாதானத்தை நோக்கிய ஒரு நகர்வினை ஏற்படுத்துவதற்கான நிலையினை உருவாக்கலாம்.

# தமிழ் மின்னல் வாக்கெடுப்பு

**சுனாமி கடற் கொந்தளிப்பு அனர்த்தமானது இலங்கையில் சமாதானத்துக்கு ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.**

❑ ஆம் ❑ இல்லை

முடிவு

| | |
|---|---|
| ஆம் | 79% |
| இல்லை | 21 % |

இந்த வாக்கெடுப்பானது தமிழ் மக்களிடையே நடாத்தப்பட்டதொன்றாகும். இதிலிருந்து நாம் பல்வேறு விடயங்களை நோக்கக் கூடியதாக இருக்கின்றது.

1. சுனாமியின் தாக்கம் சமாதானத்துக்கேதுவான ஒரு சூழ்நிலையை உருவாக்கியதோ இல்லையோ, இன்று தமிழ் மக்கள் சமாதானத்திற் கேதுவான மனநிலையிலேயே இருக்கிறார்கள். 20 வருட யுத்தத்தில் களைத்துப்போன நிலையில், இது ஒரு படி மேலே கொண்டு சென்று, சமாதானம் வேண்டும் என்ற ஒரு மனநிலையை உருவாக்கியிருக்கிறது.

2. தமிழ் மக்களும் விடுதலைப்புலிகளும் சமாதானத்துக்கு ஏதுவான சிந்தனையில் இருந்தபோதும் சிங்கள இனவாதக் கட்சிகளினால் பின்னடிக்கப்பட்டு வந்த தமிழர் உரிமைகள் இன்று இலங்கை கடற்படையின் பேரழிவினைத் தொடர்ந்து மாறுபட்ட சிந்தனைக்குக் கொண்டுசெல்லலாம்.

3. அண்மைக்காலங்களில் உலகம் இரண்டு பெரிய அனர்த்தங்களைச் சந்தித்திருக்கிறது. ஒன்று 2001 இல் நடந்த அமெரிக்காவின் இரட்டைக்கோபுரத் தாக்குதல். இரண்டாவது 2004 இன் சுனாமி கடற்கொந்தளிப்பு. இரட்டைக்கோபுரத் தாக்குதலில் தேசங்களும் இனங்களும் பிரிவுபடுத்தப்பட்டன. போர்கள் விரிவுபடுத்தப்பட்டன. ஆனால் 2004 சுனாமி அனர்த்தத்தினைப் பொறுத்தவரை தேசங்க ஒன்றுபட்டிருப்பதையும், இனங்கள் ஐக்கியப்படுத்தப்பட்டிருப்பதை மறுக்கமுடியாது. இந்நிலையில் இலங்கையரசுக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையேயான சுமுகமான நிலையும் அவ்வாறான ஒன் ஆனால் இது நிலைத்து நிற்குமா? என்பது கேள்விக்கேதுவான ஒன்

4. 21 வீதமானவர்கள் இல்லை என்ற முடிவுக்கு வந்துள்ளதையும் நாம் இங்கு அவதானிக்க வேண்டும். அதிகமாக எமது ஆசைகளுக்கும் விருப்பங்களுக்கும் இடங்கொடாது தூரநோக்கில் யதார்த்தத்தினைப் புரிந்துகொள்பவர்களாலேயே இத்தகைய கருத்தினைத் தெரிவிக்கக் கூடியதாக உள்ளது. சிங்களப் பேரினவாதிகளின் மனநிலையானது மாற்றியமைக்கப்படக் கூடிய ஒன்றாக இல்லை என்பதே உண்மை. இலங்கையரசின் இன்றைய செயற்பாடானது வெறும் அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனரமைப்பு என்று! அல்லாது பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தப்படுவதும் இனவாதம் வலியுறுத்தப்பட்டு தமிழர் உரிமைகள் பின்னடிக்கப்படுவதையும் நாம் காணலாம். எனவே, எந்த சுமுகமான நிலையும் சமாதானத்துக்கு ஏதுவாக அமையுமா என்பது சந்தேகத்துக்குரியதே.

சுனாமி கடல் அனர்த்தமானது இலங்கையிற் சுமுகமான நிலையை ஏற்படுத்தியதோ இல்லையோ, சிங்கள மக்களிடையே ஏற்படுகிற மன மாற்றம் ஒன்றே போரில்லாத சமாதானத்துக்கு ஏதுவாக இருக்கும் என்பதே உண்மை.

# வஞ்சியே வசியம் போதும்

நீ பொறுமையாய் புன்னகை சிந்தி
எத்தனை உயிர்களை வசியம் செய்தாய்
உன் புன்னகையை யார் அறிந்தார் - இன்று
நீ பூகம்பமாய் வரும் வரையில்
அள்ளி அள்ளிக் கொடுத்து நடித்து
உன்னருகினிலே அமர வைத்தாய்
பொங்கி வந்து கொண்டு போக
இலகு என்று நினைத்துத்தானோ
வஞ்சம் அற்ற நெஞ்சம் கொண்டு நாடி நாடி வந்தால்
கோரக்குணம் கொண்டு வஞ்சிக்க வைத்தாயே
இயற்கையாய் நீ கொள்ளும் குணம் சுனாமியோ - அன்றி
செயற்கையால் உன்னைக் குணம் கொள்ள வைத்தாரோ
மெல்ல மெல்ல நம் நாடு மேன்மை கொண்டு வருவதை
வஞ்சியே உனக்குப் பொறுக்க முடியலையோ
பாரிலே பஞ்சத்தைப் போக்க வழி செய்யும் நீ
கோரக்குணம் கொண்டு உயிர்ப்பலி எடுத்தாயோ
அன்பாலும் பண்பாலும் உருப்பெற்ற குடும்பங்களை
உன் வம்புக்குணத்தால் வையத்தில் மடித்தாயோ
போதும் போதும் உன் வஞ்சப்புன்னகை
மீண்டுமாய் உள்ளங்களை வசியப்படுத்தாதே

வி. ரிஷாந்தி

SAAMSTECH இன்

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான உதவித்திட்டங்கள்

அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் உயிர்களை இழந்தும், உடைமைகளைப் பறிகொடுத்தும், இருப்பிடமின்றி இடம்பெயர்ந்தும், வெறும் நிர்க்கதியற்ற நிலையில் அல்லற்பட்ட மக்களின் துயர்துடைக்கும் முகமாக உடனடி அவசர உதவிகளை SAAMSTECH நிறுவனம் வழங்கி வருகின்றது.

இதன் முதற்கட்டமாக வடமராட்சி, பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர்உணவு, உடுபுடைவை, பால்மாவகை, சவர்க்காரம், நுளம்புத்திரி, மற்றும் மருந்துப்பொருட்கள் என்பன நிறுவனத்தினால் நேரடியாக வழங்கப்பட்டன.

இதற்கான பணம் மற்றும் உதவிப்பொருட்களுக்காக நிறுவனமும் அத்தோடு ஊழியர்களின் சம்பளத்தின் ஒருபகுதியும் ஒதுக்கப்பட்டதோடு 20க்கு மேற்பட்ட ஊழியர்களின் நிவாரணச் சேர்ப்புத் திட்டத்தின் மூலமும் பெறப் பட்டுள்ளது. அத்துடன் ஜனவரி முதல் மார்ச் வரையான 3 மாதங்களிலும் நிறுவனத்தின் வருமானத்தின் ஒரு பகுதி சுனாமியாற் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண பணிகளுக்கு ஒதுக்குவதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையிற் பணிகளை மேற்கொள்வதற்கான வேலைத் திட்டங்களிற் செயற்படவென செல்வி A.நிமாலினி நிவாரணப் பணிகளுக்கான ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உணவு, உடை மற்றும் அத்தியாவசியத் தேவைகளை மட்டும் கருத்திற் கொள்ளாது மன ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உளவியல் ரீதியான செயற்பாடுகளிற் செயற்படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுனாமி நிவாரணப் பணி குழு
SAAMSTECH

மேலதிக விபரங்களுக்கும் செயற்பாடுகளுக்கும்
A. NIMALINI
சுனாமி நிவாரணப் பணிக் குழு ஒருங்கிணைப்பாளர்
841, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**பார்வை :**

# யாழ் நகரும் பிச்சைக்காரரும்

பிச்சை எடுப்பதென்பது ஆதிகாலம் தொட்டு இருந்து வருகின்ற ஒரு செயற்பாடாகும். எல்லாவகையிலும் வாழ்க்கையின் மூலாதாரத்தினை இழந்து வாழமுடியாதபடி உள்ளவர்கள் அக்காலத்திற் பிச்சை எடுத்துத் தம் வாழ்க்கையினைச் செயற்படுத்துவது வழக்கம். ஆனால் இன்று நிலைமை என்ன? அரச மற்றும் அரச சார்பற்ற பல்வேறு செயற்பாடுகளின் மத்தியிலும் முழுமையாக உழைத்து வாழக்கூடிய உடற்பாங்குடன் கூட, யாழ்ப்பாணப் பஸ்நிலையம் முழுவதும் பிச்சைக்காரர்களால் நிறைந்து காணப்படுகிறது.

தட்டங்களுடனும் பேணிகளுடனும் பிச்சைகேட்பவர்களும், குழந்தைகளை கையிலேந்திப் பிச்சைகேட்பவர்களும், வெள்ளைப்பேப்பரில் எழுதி ஒப்பமிட்டு முத்திரையிட்டுப் பிச்சைகேட்பவர்களும், மஞ்சட்பையுடனும் தட்டுகளுடனும் ஒவ்வொரு கோயிற்பேர் சொல்லிப் பிச்சை எடுப்பவர்களுமான இவர்கள், இரவு நேரங்களில் எங்கே சென்று மறைகிறார்கள் என்பது ஒரு மர்மம்.

## உண்மையில் இவர்கள் யார் ?

தாயகத்தினைச் சூறையாடும் சிங்களப்பேரினவாதிகளின் கைக்கூலிகளா?
அன்னிய தேசத்தில் இருந்து அனுப்பப்பட்ட உளவுக்கூட்டங்களா?
மரணமே முடிவாய் மக்களிடம் AIDS பரப்பும் விபச்சாரிகளா?
இரத்தம் சிந்தி உழைத்த பணத்தினை அபகரிக்கும் திருட்டுப் பேர்வழிகளா?
தீயவழியிற் பணம் பெறும் போதைவஸ்துக் கும்பல்களா?
சின்னஞ் சிறுசுகளின் வாழ்வுதனைப் பாழடிக்கும் குடிகாரக் குடிகளா?

ஆம்,

இல்லையென்று சொல்ல முடியாது. இன்று நேற்றல்ல, மன்னர் காலங்களிலேயே இந்த வேடங்களைக் கொண்டு, தேசங்கள் நோட்டமிடப்பட்டன. எமது தேசத்தின் அழிவு இவர்களால் திட்டமிடப்படுகிறது என்பதனை மறுக்க முடியாது.

எல்லாரும் அல்ல. போரிலும் சுனாமியிலும் வாழ்வுதனை இழந்து மூலாதாரங்களை இழந்து எங்கள் சில்லறைகளால் மட்டும் தினம் வாழ்வுபெறும் எம் சகோதர சகோதரிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இனங்காண்பது எப்படி? இதற்கு நடவடிக்கை எடுப்பது யார்?

உண்மையானவர்கள் அனைவரும் உடனடியாக உறுதிப்படுத்தப்பட்டு அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். போலியானவர்கள் தடைசெய்யப்பட வேண்டும். அல்லது பிச்சைக்காரர்கள் இல்லாதபடி இவர்கள் எடுத்துச்செல்லப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

கொடுப்பது மட்டுமல்ல, எமது தேசத்தைக் காப்பதே முக்கியம் .......

ஆய்வு

# இன்றைய கல்விமுறை பற்றிய உங்களுடைய கருத்து என்ன?

# இதிற் கொண்டுவரவேண்டிய மாற்றம் என்ன?

எல்லாப்பாடங்களும் எல்லாப்பாடசாலைகளிலும் ஆங்கிலம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தகவல் தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். ஒன்லைன் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மாணவர்கள் சுயமாக(Self Study) கற்கும் பாடவிதான மாற்றம் தேவை. – P. ரமேஸ்சுதன்

ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது. படிக்கும் படிப்புக்கும் செய்யும் தொழிலுக்கும் சம்பந்தம் இல்லாத நிலை மாற்றப்பட வேண்டும். செய்யவிருக்கும் தொழிலுக்கேற்ற கல்வியை ஆரம்பத்தில் இருந்தே வழங்குவதற்கு ஏற்ப இலங்கையின் கல்வித்திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும். – ஆ.தீபன்

இப்போதுள்ள கல்வித்திட்டத்தில் அதிகளவிலான கல்விச்செயற்பாடுகளினால் மாணவர்கள் கல்வியில் விரக்தியான நிலமைக்குத் தள்ளப்பட்டாலும் அதன் மூலம் மாணவர்களினது அறிவானது ஒவ்வொரு செயற்பாடுகளினாலும் வளர்க்கப்படுகிறது. இப்படியான புதிய செயற்பாடுகளினால் அவர்களினது புத்திக்கூர்மை, விவேகம், சிந்தனை, ஆற்றல் என்பன பலதரப்பட்ட விடயங்களை ஆராய்வதனால் முன்னேற்றமடைவதனைக் காணக்கூடியதாக இருக்கிறது.
R. SUBASKARAN

இலங்கையில் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் கல்வி முறையானது மிகவும் சிறந்ததல்ல. காரணம் தொழில் முறைக்கேற்ற கல்விக் கொள்கை அமையாமை. மற்றது விருப்பத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமை. ஆகவே அபிவிருத்தியடைந்த நாடுகள் பின்பற்றுகின்ற கல்விமுறையே சிறந்தது.
நா. விஜி

இறுதியாக மாற்றம் செய்யப்பட்டுள்ள கல்வித்திட்டம் ஓரளவு பயனுள்ளதாக அமைந்துள்ளது. எனினும் சில பின்னடைவுள்ள மாவட்டங்களிற் பொருளாதாரம், ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக செயற்படுத்த முடியாமலுள்ளது. சில பாடசாலைகளில் ஆசிரியர் மற்றும் அதிபர்களின் அசமந்தப் போக்கும் வெற்றியளிக்காததற்கான காரணங்களாக உள்ளது. S. Sterjilatharan

கட்டாயம் மாற்றம் தேவை. குறிப்பாகத் தொழில் முறைக் கல்வி அறிமுக செய்ய வேண்டும். K. N. Partheepan

சர்வதேச நாடுகளுடன் சேர்ந்து வர்த்தகக் கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். பெயர் குறிப்பிடவில்லை.

இன்றைய கல்வித்திட்டத்தைத் தற்காலத் தகவல் தொழில் நுட்பத்துக்கு ஏற்ற வகையிலும் சமூகப் பொருளாதாரத்திலும் மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய வகையில் மாற்றியமைத்தல் வேண்டும். – S. Kamala Venthan

இலங்கையில் தற்பொழுது உள்ள கல்வித் திட்டத்தின்படி ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. எனவே, எல்லாப் பாடசாலைகளிலும் சகல பாடங்களையும் ஆங்கிலம் மூலம் கற்பிக்க வேண்டும். ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும். A. Mayurathan

..................கல்வி கற்கும் அனைவரும் அவர்களின் திறமை, தகுதிக்கு ஏற்ற வகையில் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளக் கூடிய முறையில் திருத்தியமைக்கப்பட வேண்டும் யோ. ரதீபன்

........................ க.பொ.த. உ.த. மட்டத்திலான ஆசிரியர்களைப் பாடசாலைகளிற் கற்பிப்பதற்கு அனுமதிப்பதைத் தடைசெய்தல் வேண்டும். Vani

தொழிற் கல்வி கற்பிக்கப்பட வேண்டும். ஆங்கிலத்தில் ஆரம்பக் கல்வி அறிமுகப்படுத்தப்பட வேண்டும். கணனி மூலமான கல்வியினை ஆரம்பப் பிரிவுகளுக்குக் கற்பிக்க வேண்டும். Prabodini

தமிழ் மின்னல் தொகுப்பு : ஏராளமானோரிடம் இருந்து கருத்துக்கள் அறியப்பட்டாலும் எல்லா விடயங்களையும் அடக்குமுகமாக சில கருத்துக்கள் மட்டும் தேர்வுசெய்து பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் எமது ஆய்வில் இலங்கையில் தற்போதைய கல்வித்திட்டத்தில் மாற்றம் தேவை என்பது பொதுவாகத் தெரிவிக்கப்படுகிற ஒன்றாக இருக்கிறது. அத்தோடு ஆங்கில மூலமான கல்வி, தொழில் தொடர்பான கல்வி, மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பன பலருடைய கருத்துகளாக அமைகிறது. எனவே தொடர்புடைய அதிகாரிகள் இவற்றினைக் கவனத்தில் எடுப்பது நல்லது.

# செவ்வி - சுனாமி

Rev S.J. இராசநாயகம்
உளவியல்துறை பகுதிநேர விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

செவ்வி கண்டவர்கள் : சரூபன், தாரகாந்தன்

கே : இலங்கையில் இதுவரை இல்லாத, யாரும் எதிர்பார்க்காதவகையில் ஏற்பட்ட இந்த சுனாமி அலையின் பேரழிவினைத் தொடர்ந்து இன்று மக்கள் மனநிலை எப்படியிருக்கிறது?
ப : பேரதிர்ச்சியாகவும், நிம்மதியற்ற மனநிலையிலும் அதாவது சஞ்சலத்துடனும் காணப்படுகின்றனர். திரும்ப வரலாம் என்ற அச்சமும் காணப்படுகிறது.

கே : பாதிக்கப்பட்ட மக்கள் மனநிலையில் ஏற்பட்ட இந்த மாற்றம் தனிப்பட்ட வாழ்விலும் சமுதாயத்திலும் எத்தகைய உளவியல் தாக்கத்தினை ஏற்படுத்தும் என்று கூறமுடியுமா?
ப : பாதிக்கப்பட்ட மக்களை மூன்று வகையாக வகைப்படுத்தலாம்.

1. நேரடியாகப் பாதிப்புக்குள்ளானவர்கள் அதாவது நேரடியாகச் சம்பவத்திற் சிக்குண்டு உயிர் தப்பியோர்.
2. உடன் பாதிக்கப்பட்டவர்கள். அதாவது உடைமைகளையும் உறவினர் களையும் இழந்தவர்கள்.
3. தூரத்தில் இருந்தவர்கள் : TV காட்சிகள், பேச்சுக்கள், பத்திரிகைகள் மூலமாகப் பாதிக்கப்பட்டவர்கள்

இவர்களின் மனதிலுள்ள காயம் அல்லது பதற்றமான மனநிலை காரணமாக பயம், அதிர்ச்சி, நித்திரை இன்மை, நித்திரையில் திடீரென விழித்தல் போன்றன காணப்படலாம். இன்னொன்று அவர்களிடம் குற்ற உணர்வுகள் அதாவது பெற்றோரை அல்லது சகோதரரைக் காப்பாற்றவில்லை என்ற மனநிலை ஏற்படலாம். இந்த எண்ணம் சில வேண்டாத முடிவுகளுக்கு அழைத்துச் செல்லலாம்.

கே : இப்பாரிய இழப்புகளின் மத்தியில், வாழ்க்கையின் மூலாதாரத்தினையும் எதிர்கால நம்பிக்கையினையும், தம் உறவுகளையும் இழந்துள்ள குடும்பங்களுக்கான அறிவுரைகள், தீர்வுகள் அல்லது உங்கள் செயற்பாடுகள் என்ன?
ப : நாங்கள் இப்பணியிலுள்ள தொண்டர்களுக்கு உளவியல், சமூக, ஆன்மீக ரீதியான பயிற்சியினைக் கொடுத்து அவர்களை பல்வேறுபட்ட இடங்களுக்கு அனுப்பியுள்ளோம். பாதிக்கப்பட்ட மக்களின் உளச்சுமையைக் குறைப்பதற்கான முதலுதவிப் பயிற்சியே இதுவாகும். அதாவது அதிர்ச்சியில் இருக்கும்போது ம உழைச்சலில் இருந்து விடுபட உளவியல் ரீதியிலான செயற்பாடாகு நம்பிக்கையை ஊட்டுதல், உடனிருத்தல், ஒத்துண்டு அவருடன் கதைத்த அவர்களின் உணர்வுகளை ஏற்று நடத்தல் என்பன அவற்றில் சிலவாகு அத்தோடு அவர்களுடன் நாங்கள் இருக்கிறோம், அவர்களுடைய துன்பத் பங்கு கொள்கிறோம். எல்லாம் நல்லதாக அமையும் என்று கருதுகிறோம்.

# குழந்தைகள் பக்கம்

## எமது அன்பிற்குரிய சிறார்களே,

எதிர்காலத்தை ஆளப்போகும் தலைவர்கள் நீங்கள். எனவே அவசியமான நல்ல தகவல்களை அதிகம் படியுங்கள். வெற்றியை இலக்காக கொண்டு செயற்படுங்கள். பெரியோர் சொல்லும் முதுமொழிகளைக் கேட்டு நற்பழக்கமுள்ள பிரஜைகளாக வாழ வேண்டும். இன்றைய கால வேகத்தில் நீங்கள் விவேகமான வித்தகர்களாய் வாழ்வில் மிளிர, எமது ஆக்கபூர்வமான உந்துதல் உங்களுக்கு என்றும் கிடைக்கும்.

### கற்றுக்கொள்

- பூக்களைப் பார்
  -சிரிப்பைக்கற்றுக்கொள்.
- நாயைப் பார்
  -நன்றியைக் கற்றுக்கொள்.
- எறும்புகளைப் பார்
  -உழைப்பைக் கற்றுக்கொள்.
- காக்கையைப் பார்
  -ஒற்றுமையை கற்றுக்கொள்.
- கொக்குகளைப் பார்
  -பொறுமையை கற்றுக்கொள்.
- மரங்களைப் பார்
  -உதவுவதைக் கற்றுக்கொள்.

### விடுகதைகள்

- ❑ ஓட்டம் நின்றால் ஆட்டம் போச்சு.
- ❑ குதிரை ஓட ஓட வால் குறையும்.
- ❑ நான் பலபேரைத் தாக்குவேன், என்னை யாரும் தாக்க முடியாது.
- ❑ காலில்லாதவன் தாவிக்குதிப்பான், மோசம் பண்ணுவான்.
- ❑ இந்த ஊரில் அடிபட்டவன், அடுத்த ஊரிற் போய்ச்சொல்லுவான்.
- ❑ சொன்னால் கேட்கும், திருப்பிச் சொல்லாது.
- ❑ காட்டுமானல்ல, வீட்டுமானுமல்ல கடல்நடுவே மான்.

-பதில்கள் கீழே

### கட்டுரைப்போட்டி

கீழ்வரும் பழமொழிகளில் ஒன்றை வைத்து 100 சொற்களில் எழுதுங்கள்.

- ❑ காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
- ❑ அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்
- ❑ கையாளாத ஆயுதம் துருப்பிடிக்கும்
- ❑ தன்பலம் கொண்டு அம்பலம் ஏற வேண்டும்
- ❑ பதறாத காரியம் சிதறாது
- ❑ வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

16 வயதிற்கு உட்பட்டவர்கள் சுயமாக எழுதி ஆக்கங்களை அனுப்ப வேண்டும். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட ஆக்கங்களையும் அனுப்பலாம். சிறந்த ஆக்கங்கள் ஒவ்வொன்றுக்கும் பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

முகவரி : Tamil Minnal, 841, Hospital Road, Jaffna.

### விடுகதை பதில்கள்

இரத்தம்
ஊசியும் நூலும்
மின்சாரம்
அலை
தந்தி
காது
அந்தமான்

## வெற்றி பெறுபவன்

தோற்றுவிட்டேன் என்று கருதுவாயானால், நீ நிச்சயம் தோற்றவனே. உன்னால் ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. நீ வெற்றி பெற விரும்பி அதே நேரம் நம்மால் முடியாது என்று நினைப்பாயானால், நீ வெற்றி பெற மாட்டாய். சீக்கிரமோ அல்லது தாமதித்தோ எப்படியும் வெற்றி பெறுபவன் யாரெனில், என்னால் முடியும் என்று எண்ணுகிறவன் மட்டுமே.

## பழமொழி

இடைவிடாது முயற்சி செய்துகொண்டிருப்பவனே இந்த உலகில் உண்மையாக வாழுகின்ற மனிதனாவான். - ஜெர்மன்

## பரீட்சை எழுதப்போகுமுன்

கடினமான முயற்சி வெற்றிதரும் ..
நம்பிக்கை வெற்றி தரும் ..
தொடர்ந்து போராடினால் வெற்றி கிடைக்கும்
இது போதுமா.......
உங்களுக்கு ஏற்ற விதத்திற் சரியான முறையிற் சிந்தித்துச் செயற்பட்டால் வெற்றி உங்கள் பக்கமே !!!

## பொது அறிவு

- செயற்கைக்கோளை முதன் முதலாக விண்வெளிக்கு அனுப்பிய நாடு சோவியத்யூனியன்
- மின்னல் மணிக்கு 30000 தடவைகள் மின்னுகின்றது
- உலகில் மிக உயரமான நீர்வீழ்ச்சி வெனிசுலாவில் உள்ள ஏஞ்சல்
- நண்டுகளுக்குப் பற்கள் அதன் வயிற்றில் இருக்கும்
- மூன்று தலைநகரங்களைக் கொண்ட நாடு - தென்னாபிரிக்கா
- சூரியனைப் பார்த்து நேரத்தைக் கணக்கிட்டவர்கள் எகிப்தியர்கள்
- உப்பு நிறைந்த கடல்நீரைப் பருகும் பறவை பெங்குவின்
- நாட்டின் பெயர் குறிப்பிடாது முத்திரை வெளிவிடும் நாடு ஐக்கிய இராச்சியம்
- உலகில் தக்காளி அதிகம் உற்பத்தியாகும் நாடு அமெரிக்கா.

## ஈசாப் :

நரியும் திராட்சைப்பழமும், ஆமையும் முயலும் போன்ற கதைகளைக் கேட்பதைவிடக் குழந்தைகளுக்கு ஆனந்தம் வேறு ஏதுமில்லை. ஆனால் இந்தக் கதைகளுக்குச் சொந்தக்காரர் யார் என்பது யாருக்கும் தெரியாதிருக்கலாம். அவர்தான் ஈசாப். கி.மு 620 இல் கிரேக்கத்தில் அடிமையாகப் பிறந்த இவரின் அறிவுக்கூர்மையைப் பாராட்டிச் சுதந்திர மனிதராக்கப்பட்டு லிபியா நாட்டு மன்னன் குரோசஸ் என்பவரால் அதன் அரசவை உறுப்பினராக்கப்பட்டார். அங்கு ஒருமுறை டெல்பி என்ற நகருக்கு நிவாரணப்பணிக்காகச் சென்றபோது. பேராசை பிடித்த அவ்வூர் மக்களாற் கொலைசெய்யப்பட்டார். அவர் அன்று கொலைசெய்யப்பட்டாலும் அவருடைய கதைகள் இன்றும் ஒவ்வொரு குழந்தைகளையும் மகிழ்வித்துக் கொண்டிருக் கின்றன.

# விவசாயியும் குருவியும்.

ஒரு ஊரில் விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தனது வயலில் வேளாண்மை செய்து அறுவடை வரை ஓயாது பாடுபட்டு உழைத்து வந்தான். அந்த வயலில் ஒரு வானம்பாடிக் குருவி தன் குஞ்சுகளுடன் கூடுகட்டி வாழ்ந்து வந்தது. அது ஒவ்வொரு நாளும் இரை தேடுவதற்காக நெடுந்தூரம் செல்வது வழக்கம். வழமைபோல் ஒரு நாள் குஞ்சுகளுக்கு இரைதேடிச் சென்றது. அப்போது அறுவடைக்காலம் நெருங்கிவிட்டது. அந்த நேரத்தில் விவசாயி தன் மகனை அழைத்து, இன்று வயலை அறுவடைசெய்ய வேண்டும் என்றும் ஆகையால் சில கூலிக்காரர்களின் பெயர்களைச்சொல்லி அவர்களை அழைத்து வருமாறும் கூறினான். இந்த சம்பாஷனையைக் குருவிக்குஞ்சுகள் தன் தாய்க் குருவி வந்ததும் கூறின. இதைக்கேட்ட தாய்க்குருவி இதனால் நீங்கள் கவலையடைய வேண்டாம். நாம் தொடர்ந்தும் இங்கேயே இருப்போம் என்றது. மறுநாள் கூலிக்காரர்கள் வராததைக்கண்ட விவசாயி மறுபடியும் தன் மகனை அழைத்து, நாளை அறுவடைசெய்ய வேண்டும் ஆதலாற் கூலிக்காரர்களை அழைத்து வரும்படி கூறினான். இதைக்கேட்ட குஞ்சுகள் தாய்க்குருவி வந்ததும் இதனை கூறி வேறு இடத்திற்கு போவது பற்றி ஆலோசனை கேட்டது. அதற்குத் தாய்க்குருவி முன்னர் கூறியது போன்றே கூறியது. இவ்வாறு பல தடவை அழைப்புவிடுத்தும் கூலிக்காரர்கள் வராததால் தன் மகனை அழைத்து "இனிக் கூலிக்காரர்களை நம்பிப் பயனில்லை. எனவே நாளை நாமே வயல்களை அறுவடை செய்வோம். ஆகையால் அதற்குரிய ஆயத்தங்களை நீ கவனி" என்று கூறினான். இதனையும் குருவிக்குஞ்சுகள் தம் தாய்க்குருவியிடம் கூறின. இதனை கேட்ட தாய்க்குருவி உடனே நாம் இவ்விடத்தைவிட்டுப் போயாக வேண்டும். எல்லாரும் தயாராக வேண்டும். வழமைக்கு மாறான இப்பதிலைக்கேட்ட குருவிக்குஞ்சுகள் அதற்குரிய காரணத்தையும் வினாவின. அதற்குத் தாய்க்குருவி "என் அருமைச்செல்வங்களே, இத்தனை நாட்களும் அந்த விவசாயி பிறரை நம்பி இருந்தமையால், அது நிறைவேறாது என்று நம்பினேன். ஆனால் இன்று அவன் தானே அறுவடைசெய்ய வேண்டும் என்று முடிவுசெய்ததால் நிச்சயம் அது நடைபெறும் என்று உறுதியாகிவிட்டதால் தான் இந்த முடிவிற்கு வந்தேன்" என்று விளக்கமளித்தது.

அரைமணித்தியாலம் என்று அற்பமாகக் கருதாமல் அந்த அரை மணிநேரத்தில் அற்புத மான காரியத்தினைச் செய்ப வன் மேலான மனிதன்.
- கதே

கற்காமல் இருப்பதை விடப் பிறக்காமல் இருப்பதே மேல். ஏனெனில் அறியாமைதான் துர்ப்பாக்கியத்தின் மூலவேர்.
- பிளேட்டோ.

## டைட்டானிக்

உலகில் மிகவும் சக்தி வாய்ந்த விஞ்ஞான தொழில் நுட்பத்துடன். கவிழ்க்கவே முடியாது என்ற எண்ணத்துடன் தலைசிறந்த விஞ்ஞானிகளாற் கட்டப்பட்ட கப்பல் டைட்டானிக் ஆகும். இங்கிலாந்து நாட்டிற் கட்டப்பட்ட இந்த கப்பல் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்லும்போது பனிப்பாறை ஒன்றுடன் மோதி, இக்கப்பல் கடலில் மூழ்கியது. இந்த விபத்து 1912ம் ஆண்டு நடந்தது. 2207பேர் பயணம் செய்த இக்கப்பலில் 1500க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். குறைந்தளவானோரே காப்பாற்றப்பட்டனர்.

# பார்த்தது.. ரசித்தது...

## எந்த நாள் நல்ல நாள்

நாம் ஒரு காரியத்தைச் செய்யும்போது, எந்த நாளிற் செய்ய வேண்டும்? இது பலருடைய கேள்வி. பிறக்கும் போதும் இறக்கும் போதும் நாள் பார்க்காத நாம், இடையில் மட்டும் ஏன் நாள் பார்க்க வேண்டும்? இது பலருக்குப் புரிந்திராத விடயம். நாள் பார்த்துச் செய்யும் காரியங்கள் மட்டும் நன்றாக முடிகின்றனவா? அல்லது நாள் பார்க்காமற் செய்யும் காரியங்கள் கெட்டுப்போய் விடுகின்றனவா? ஒவ்வொரு நாளும் நல்ல நாளே. எனவே, ஏதும் செய்ய வேண்டுமா? அதனை இன்றே செய்யுங்கள். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் வாழ்விற் சில நாட்கள்..

லிங்கன் பிறந்தது - ஞாயிறு
முதல் முறையாக ஜனாதிபதியானது - திங்கள்
இரண்டாவது முறை ஜனாதிபதியானது - செவ்வாய்
வழக்கறிஞராகப் பதிவுசெய்து கொண்டது - புதன்
'கெட்டிஸ்பர்க்' உரையாற்றியது - வியாழன்
லிங்கன் சுடப்பட்டது - வெள்ளி
லிங்கன் உயிர் நீர்த்தது - சனி

## பொன்மொழிகள்

சிந்திக்காது எதையும் சொல்லாதே, ஆராயாது எதையும் செய்யாதே.

வெற்றியென்பது பெற்றுக்கொள்வதற்கு. தோல்வி என்பது கற்றுக்கொள்வதற்கு.

மற்றவர்கள் உன்னால் செய்ய முடியாது என்பதைச் செய்து காட்டு வதே வாழ்க்கையிற் பேரானந்தமாகும்.

வாழ்க்கையில் இன்பம் துன்பம் யாவற்றையும் தாங்கிக்கொள்ளும் மனதுடையவராக இருக்கப் பழகிக்கொள்ளுங்கள்

அமெரிக்காவுக்கு, ஐக்கிய அமெரிக்க நாடு என்று பெயரிட்டவர், இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில்.

விமானங்களின் சக்கரங்களில் நைதரசன் அடைக்கப்படுகிறது. ஏனெனில், தரையிறங்கும்போது, தரையுடன் உராய்வதாற் சூடாகித் தீப்பிடிக்காமல் இருப்பதற்காகும்.

கின்னஸ் புத்தகம் எனும் உலச சாதனைப் புத்தகத்தை ஐக்கி இராச்சியத்தைச் சேர்ந்த பேர்ல் எ பேக் 1955ல் உருவாக்கினார்.

ஜென்ட்டூ எனப்படும் பெங்குவி இனப்பறவைகள் தங்கள் கூடுகளை கற்களால் கட்டுகின்றன.

படிப்பதற்குப் போதிய அளவு ஒளிெ 12 மின்மினிப் பூச்சிகளால் வழ முடியும்.

# யார் இவர்கள்

**வில்லியம் ஷேக்ஸ்பியர் :** உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர்.

**ஜோர்ஜ் வாஷிங்டன் :** ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி

**லெனின் :** கால்மாக்ஸின் பொதுவுடைமைத் தத்துவத்தின் அடிப்படையில் ரஷ்யாவில் பெரும் புரட்சியை நடாத்தி சோவியத் ரஷ்யாவைப் பொதுவுடைமை நாடாக்கியவர்.

**ரவீந்திரநாத் தாகூர்:** கீதாஞ்சலி என்ற கவிதை நூலுக்காக நோபல்பரிசு பெற்ற இந்தியாவின் வங்காள மாநிலப் புகழ்பெற்ற காவியம், இந்தியாவின் தேசிய கீதம் ஆகியவற்றை இயற்றியவருமாவார்.

**ஜேம்ஸ் குக் :** அவுஸ்திரேலியா வைக் கண்டு பிடித்த ஆங்கில மாலுமி.

**வின்ஸ்ரன் சேர்ச்சில் :** இரண்டாவது உலக யுத்தத்தின் போது பிரித்தானியாவிற் பிரதம மந்திரியாகக் கடமையாற்றியவர்

**பிக்காசோ :** ஸ்பானிய நாட்டைச் சேர்ந்த இவர், நவீன ஓவியங்களின் தந்தையாவார்.

ஆங்கிலத்தில் உள்ள உயிர் எழுத்துக்கள் ஐந்தும் உள்ள சொல் எது?

Education

## ஓஸோன்

நாம் சுவாசிப்பதற்குத் தேவையான ஒட்சிசன் வாயுவின் ஒரு பிரிவுதான் ஓஸோன். வாயு மண்டலத்தில் மிகவும் குறைந்த அளவில் இது இருந்தாலும் பூமிக்கு மேலே ஓஸோன் வாயுப்படலம் படர்ந்துள்ளது. சூரியனில் இருந்து பூமிக்கு வரும் சூரிய ஒளியிற் புற ஊதாக் கதிர் என்னும் ஒருவகைக் கதிர் வீச்சு மனிதனுக்குத் தீங்கை விளைவிக்கக் கூடியது. இந்தக் கதிர் வீச்சால் மனிதனுக்குப் பலவிதமான நோய்கள் ஏற்படுகின்றன. குறிப்பாகத் தோல் நோய்கள், கண் பாதிப்புக்கள் போன்றவை அடங்கும். அத்துடன் பூமியிற் காணப்படும் தாவரங்களுக்கும் இதனால் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இந்தப் புற ஊதாக்கதிர் வீச்சை ஓஸோன் வாயுப்படலம் 99சதவீதம் வடிகட்டிப் பூமிக்கு அனுப்புகின்றது.குளோரோ புளோரோ காபனால் (CFC) ஓஸோன், படலம் அழிகிறது. ஓஸோன் வாயு மண்டல ஓட்டை மிகப்பெரிதாக்கி வருகிறது. இதனால் உயிர் இனங்கள் அழிவுக்கு உட்படும். அந்தாட்டிக்காக் கண்டத்தின் வாயு மண்ட லத்தில் ஓஸோன் பெருமளவுக்குக் குறைந்து வருவதைக்கண்ட விஞ்ஞானிகள் குழு அச்சம் தெரிவித்துள்ளனர்.


வெடிமருந்து, வாணவெடி, பீங்கான் கோப்பை மற்றும் காகிதம் போன்றவற்றினைக் கண்டுபிடித்த நாடு சீனா.


வெப்பமான இடங்களில் அல்லது காலங்களில் மரங்களுக்கு அதிக சூரிய ஒளி கிடைப்பதால் அதிகமான மாப்பொருள் பழங்களிற் சேமிக்க முடிகின்றது. எனவே வெல்லம் அதிகமாக தோன்றுவதால் அதிக இனிப்புடையதாக இருக்கிறது.


ஓர் எறும்பு தன் எடையைப்போல் 50 மடங்கு பளுவைச் சுமந்துசெல்ல வல்லது.

# கண்ணில ஏதோ பிழை போல

தலையை கொஞ்சம் அசைச்சு பாருங்க. நடு வட்டம் அசைவது தெரியும்








இந்த யானைக்கு எத்தனை காலுங்க

என்னங்க, மேல ஒழுங்கான வட்டம் நெளிஞ்சு தெரியுது.

ஒரு நிமிஷம் பாத்திட்டு கண்ண மூடினா, கடவுளே கண்ணுக்க வாறாருங்க



இஞ்ச பாருங்கோ, கறுப்புப் பொட்டுப் பொட்டா வந்து போகுது



மூளைக்கு வேலை

# கணக்குகள்

பதில்களை எழுதி அனுப்புங்கள். சரியான பதிலுக்குரியவர்களின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்

1. 1, 3, 4, 6 ஆகிய இலக்கங்களைத் தலா ஒரு தடவையும் +,-,*,/ மற்றும் அடைப்புக்குறியையும் பயன்படுத்தி 24 இனைப் பெறுவதற்கான வழி என்ன?
   உதாரணம் : 25 பெறுவதற்கு (6+1) * 4-3

2. ஒரு கார் மேல் நோக்கிய பாதையில் 56 Mph வேகத்திலும் சமதரையான பாதையில் 63 Mph வேகத்திலும் கீழ் நோக்கிய பாதையில் 72 Mph வேகத்திலும் செல்கிறது. இந்தக் கார் A என்ற நகரத்திலிருந்து B என்ற நகரத்துக்கு செல்ல 4மணி 40 நிமிடம் எடுக்கிறது. A,B நகரங்களுக்கு இடையிலான தூரம் என்ன?

3. மூன்று இலக்கங்களின் கூட்டுத்தொகை 6 அவற்றின் வர்க்கங்களின் கூட்டுத்தொகை 8 அவற்றின் மூன்றாமடுக்குகளின் கூட்டுத்தொகை 5 அவற்றின் நான்காம் அடுக்குகளின் கூட்டுத்தொகை எவ்வளவு?

4. ஒரு பெட்டியில் 3 கறுப்புத்தொப்பிகளும் 2 வெள்ளைத்தொப்பிகளும் இருந்தன. ABC என்ற மூவர் கண்கள் கட்டப்பட்ட நிலையில் ஒவ்வொரு தொப்பியை எடுத்து தலைகளில் அணிகின்றனர். தங்களுடைய தலைகளில் இருக்கும் தொப்பிகளின் நிறம் அவர்களுக்குத் தெரியாது B,C ஆகியோரின் தலையிலுள்ள தொப்பியின் நிறம் A இற்கு தெரிவிக்கப்படுகிறது C யின் தலையில் இருந்த தொப்பியின் நிறம் B இற்கு தெரிவிக்கப்படுகிறது. A தன்னுடைய தலையிலுள்ள தொப்பியின் நிறம் தனக்குத்தெரியாது என்கிறார். அதைக்கேட்ட B தன்னுடைய தலையிலுள்ள தொப்பியின் நிறம் தனக்குத்தெரியாது என்றும் கூற C தன்னுடைய தலையிலுள்ள தொப்பியின் நிறம் தனக்குத் தெரியும் என்றும் அதன் நிறத்தையும் சரியாகச் சொல்கிறார். C அணிந்திருக்கும் தொப்பியின் நிறம் என்ன?


5. என்னுடைய சகோதர சகோதரிகளே, எனக்கு யாரும் இல்லை. ஆனால் இவருடைய அப்பா என்னுடைய அப்பாவின் மகன். இவர் யாரைப்பற்றிக் கதைக்கிறார்?

6. ஒரு நத்தை ஒரு கிணற்றில் 20 அடி கீழே சுவரில் இருக்கிறது. தினமு 5 அடி ஏறி 4 அடி சறுக்குகிறது. கிணற்றின் மேலே வருவதற்கு எத்தை நாட்கள் எடுக்கும்?

7. ஒரு வட்டவடிவமான கேக் ஒன்றினை 3 நேர் வெட்டுக்களில் சரிதுண்டுகளாக வெட்டவேண்டும். இரண்டு வழிமுறைகளும் எவை?

8. ஒரு சதுரங்கப்பலகையில் (Chess Board) எத்தனை சதுரவடிவங்கள் உள்ள (64 என்பது தவறு)

9. அடுத்த இரண்டாவது வடிவமானது முதலாவது வடிவத்தில் பயன்படுத்திய 4 துண்டுகளை மாற்றியமைப்பதன் மூலம் பெறப்பட்டுள்ளது. ஆனாலும் ஒரு இடைவெளி ஏற்படுகிறது. இதற்கான காரணம் என்ன?





10. கையெடுக்காமல் நான்கு நேர்கோடுகளை வரைந்து ஒன்பது புள்ளிகளையும் இணைக்கவும்.

O O O
O O O
O O O

11. A, B என்ற இருவர் 100m தூரம் ஓடுகின்றனர். B, 5m பிந்தி முடிக்கின்றான். இரண்டு பேரும் ஒரே நேரத்தில் முடிப்பதற்காக A, 5m பின் நின்று போட்டியைத் திரும்பவும் ஆரம்பிக்கின்றனர். இருவரும் முதலில் ஓடிய அதே வேகத்தில் ஓடுவார்களாயின் யார் முதலில் இலக்கை அடைவார்கள்?

2. தரப்பட்டுள்ள இந்த படத்தினை நான்கு சம அளவுள்ள சம வடிவுள்ள துண்டுகளாகப் பிரிக்கவும்.



# ரூபா 50,000/- பரிசுப் போட்டி

# பொது அறிவு

**நிபந்தனைகள்**

1. முதல் பரிசு ரூபா 25000, இரண்டாம் பரிசு 15000, மூன்றாம் பரிசு 10000. ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் குறிப்பிட்ட ஒரு பரிசுக்குரியவராகவரின் பரிசுத்தொகை பகிர்ந்தளிக்கப்படும்.
2. 15 ஏப்ரல் 2005 வரை பிரசுரிக்கப்படும் 300 கேள்விகளுக்கான மொத்த பதில்களின் அடிப்படையில் முடிவுகள் தீர்மானிக்கப்படும்.
3. ஒவ்வொரு சரியான பதிலுக்கு (+1) புள்ளியும் ஒவ்வொரு தவறான பதிலுக்கு (-1) புள்ளியும் வழங்கப்படும்.
4. ஒவ்வொரு வாரமும் வெவ்வேறு துறைகளில் இருந்து கேள்விகள் தரப்படும்
5. ஒவ்வொரு இதழுக்கான பதில்களும் அடுத்த மாதம் அதே திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்
6. SAAMSTECH மற்றும் தமிழ் மின்னல் ஊழியர்கள் மற்றும் அவர்கள் உறவினர்கள் கலந்துகொள்ள முடியாது.
7. பதில்கள் அனுப்பிவைக்கப்படும்போது சந்தா இலக்கம் கண்டிப்பாக குறிப்பிடப்பட வேண்டும்
8. இதுவரை சந்தா பெறாதவர்கள் 48ம் பக்கத்தில் உள்ள சந்தா விண்ணப்பத்தினைப் பூர்த்திசெய்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.
9. தமிழ் மின்னல் முடிவுகளே இறுதியானது.

**கேள்விகள் 1 - 20**

1. விண்வெளியில் நீண்ட நாட்கள் மிதந்தவர் யார்?
1. நீல் ஆம்ஸ் ரோங் 2. க ஒறு 3. வாஸ்டாக் 4. அலெக்ஸ் ஏலியசோஸ்

2. உலகின் பெரிய நீர்வீழ்ச்சியான நயாகரா 1 மணிநேரத்தில் எவ்வளவு தொன் நீரை வெளியேற்றுகிறது.
1. 40 தொன்கோடி 2. 15 தொன்கோடி 3. 25 தொன்கோடி 4. 30 தொன்கோடி

3. நாலுகால் பிராணிகளில் நீந்தத் தெரியாதது
1. ஒட்டகம் 2. மான் 3. பசு 4. கங்காரு

4. இலங்கைக்கான அரசியல் அமைப்புச் சட்டத்தை முதன் முதல் வரைந்தவர்
1. சேர் ஐவர் ஜன்னிஸ் 2. தொலமி 3. ஆனந்த சமரக்கோன் 4. சேர் தாம்ரே

5. கருணைக்கொலை செய்ய முதன் முதற் சட்டபூர்வ அதிகாரம் வழங்கிய நாடு
1. கனடா 2. அமெரிக்கா 3. சுவீடன் 4. நெதர்லாந்து

6. ஸ்கொட்லாந்தின் தேசிய விளையாட்டு எது?
1. கிரிக்கட் 2. கொக்கி 3. கால்பந்து 4. எல்லே

7. குழந்தைகள் தினம் எப்போது கொண்டாடப்படும்?
   1. மார்ச் 22  2. நவம்பர் 14  3. ஒக்டோபர் 1  4. ஜனவரி 30

8. இருவேறுபட்ட தேசியக் கொடிகளைக் கொண்ட நாடு
   1. போர்த்துக்கல்  2. ஸ்பானிஸ்  3. பனாமா  4. ஈரான்

9. டென்மார்க்கின் தேசியச் சின்னம் எது?
   1. கடற்கரை  2. தாமரை  3. நீலக்கொக்கு  4. மரங்கள்

10. இரத்தம் உறையப் பயன்படும் வேதிப்பொருள் எது?
   1. மக்னீசியம்  2. கல்சியம்  3. காபனேற்  4. ஈயம்

11. தூங்கும்போது எது கண்களை மூடாமல் இருக்கிறது?
   1. தாரா  2. ஆந்தை  3. மீன்  4. புலி

12. உலகில் புகையிலை உற்பத்தியில் முதலிடம் வகிப்பது
   1. இந்தியா  2. இங்கிலாந்து  3. ஜேர்மனி  4. இலங்கை

13. நீரை அருந்தாத மிருகம் எது?
   1. கங்காரு  2. யுனிக்கோண்  3. ஸலாத்  4. காண்டாமிருகம்

14. எயர்லங்கா எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது?
   1. 1981  2. 1979  3. 1972  4. 1890

15. சுரங்க ரயில் பாதை எந்தநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது?
   1. பிரான்ஸ்  2. இந்தியா  3. இங்கிலாந்து  4. இத்தாலி

16. இடிமின்னல்களின் நாடு என அழைக்கப்படுவது
   1. எகிப்து  2. சூடான்  3. இஸ்ரேல்  4. ஈராக்

17. நீரின்றி நிலத்திலும் வாழும் மீனினம் எது?
   1. ஈல்  2. விரால்  3. ராபிள்  4. சுறா

18. சிப்பியில் இருந்து முத்து விளைய எத்தனை வருடங்கள் எடுக்கும்?
   1. 10 வருடம்  2. 15 வருடங்கள்  3. 20 வருடங்கள்  4. 25 வருடங்கள்

19. மூன்று கண்களை உடைய மிருகம் எது?
   1. காவில்கைஸ்  2. டுவாடா  3. ருமான்  4. குவின்

20. முதல் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்ற நாடு எது?
   1. இந்தியா  2. நியூஸ்லாந்து  3. அமெரிக்கா  4. மலேசியா

**குறிப்பு:**

சந்தா பெறவிரும்புபவர்கள், இலங்கைமுழுவதிலுமுள்ள எமது நிறுவனக் கிளைகளில், யாழ்ப்பாணம் அல்லது கொழும்புத் தலைமையகங்களிற் பெற்றுக்கொள்ளலாம்.

## விஞ்ஞானமும் உளவியலும்

# மரணத்தினை அணிமித்து மீண்ட அனுபவங்கள்

- சபீத்தா.B (யாழ். பல்கலைக்கழகம்)

ஆங்கிலத்தில் NEAR DEATH EXPERIENCE என்று அழைக்கப்படும் மரணத்தினை அண்மித்து மீண்ட அனுபவமானது, பழங்கால நாடகங்கள் முதல் நவீன ஆய்வுகள் வரை பலராலும் பரபரப்பாகப் பேசப்படுவதும் வியப்புக்குரிய ஒன்றாகவும் காணப்படுகிறது. மரணமடைந்ததாகக் கருதப்பட்டுப் பின்னர் அந்த மரணத்தில் இருந்து மீண்ட பலர் அந்த மரண வேளைகளில் அவர்களுக்கேற்பட்ட பல அனுபவங்களைக் குறித்துச் சொல்லப்படுகின்ற விடயங்களே இவை.

இந்த அனுபவத்தினைக் குறித்த கருத்துகளிற் பல்வேறு மாறுபட்ட விடயங்கள் இருந்தாலும், அதிற் குறிப்பிடப்படுகின்ற அநேக காரியங்கள் பல்வேறு ஒற்றுமையைக் கொண்டிருப்பதை மறுக்கமுடியாது. இந்த அனுபவங்கள் பொதுவாக வியாதிகள் அல்லது விபத்தினைத் தொடர்ந்தே ஏற்படுகிறது.

அந்த அனுபவத்தின்போது தம் சொந்த உருவமாகவும் ஆனால் உருவமற்றவர்களாகவும் தம்மைக் காண்கிறார்கள். இதனால் தம் உருவத்தினைக் குறித்துக் குழப்பமடைந்ததாகவும் சிலர் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த அனுபவத்தின்போது பார்வை, கேட்டல் என்பன அதிக உணர்வுள்ளதாகவும் அதாவது அதிக தூரங்களைப் பார்க்கக்கூடியதாகவும் மிக மெதுவான சத்தங்களைக் கேட்கக்கூடியதாகவும் இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். இருண்ட குகைவழியாகப் பயணிப்பதாகவும், இறுதியிற் பிரகாசமான ஒளி ஒன்றினை அடைவதாகவும் கூறுகிறார்கள். இந்தப் பிரகாசமான ஒளியினை உடலில்லாத உருவங்கள் பார்க்கின்றபோது கண்களிற் கூச்சத்தினையோ அல்லது எந்த வேதனையையோ தரவில்லை எனவும், எனவே அதிகமான பிரகாசத்திலும் ஒளியை விட்டு முகத்தினைத் திருப்பவேண்டிய தேவை இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்த ஒளியில் ஓர் அமைதியும் அன்பும் கலந்த உணர்வு இருந்ததைப் பலரும் தெரிவித்துள்ளனர். நாம் கடவுள் என்று சொல்லும்போது குறிப்பிடுகின்ற இயல்புகளை அந்த ஒளியில் அனுபவ ரீதியாக உணர்வதாகத் தெரிவிக்கப் படுகிறது. அங்கு அந்த ஒளியினூடாகத் தாம் இதுவரை செய்த எல்லாக் காரியங்களும் தாம் பேசிய எல்லா வசனங்களும் தமக்கு உணர்விக்கப்படுவதாகவும், தாம் அங்கு போவதற்கான நாள் சரியாக இருக்காத காரணத்தினால் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர். தாம் திருப்பி அனுப்பப்படவேண்டுமா என்பது குறித்துக் கேட்கப்பட்டதாகவும் அதுகுறித்த பதில் தம் சிந்தனையில் எழுவதற்கு முன்பாகவே தாம் இங்கு மீள உயிர்பெற்றதாகவும் சொல்லப்படுகிறது.

இந்த அனுபவத்தைப் பெறுபவர்கள் இந்த உலகத்துக்கும், தாம் சென்றதாக தெரிவிக்கும் இடத்துக்கும் இடையே தடை இருப்பதாகவும் அது பல்வேறுபட்டதாக வெவ்வேறானவர்கள் தெரிவிக்கிறார்கள். இந்த அனுபவத்திற் கூடாகச் சென்றோர் தாம் புதிதாக, தாம் ஓரிடத்திற்கு சென்றதாக அல்லாமல் தாம் ஏற்கனவே இருந்து வந்த ஒரு இடத்திற்கே செல்வதாக உணர்வதாகவும் சொல்லியுள்ளனர்.

இந்த அனுபவமானது சிலருக்கு மகிழ்ச்சியானதாகவும் சிலருக்கு மிகவும் கொடியதாகவும் தென்படுவதாகவும் கூறுகின்றபோதிலும் அந்த அனுபவமானது உலகில் அதுவரை பெற்றிராத ஒரு வித்தியாசமான அனுபவமாக இருந்ததென்பதை அனைவரும் ஒத்துக்கொள்கின்றனர்.

இந்த அனுபவத்தினைப் பெற்றுக்கொண்ட நேரம் கணக்கிட முடியாத ஒன்றாகவும், உலகத்து நேரக்கணிப்பீடுகளில் இருந்து மாறுபட்டு இருக்கலாம் அல்லது நேரம் என்கின்ற ஒன்று அங்கு இல்லாதிருக்கலாம் என்றும் அறியவருகிறது.

வயது, மத, பிரதேச வேறுபாடுகளின்றி எல்லாவகையினரும் இந்த அனுபவத்திற்கூடாகச் சென்றிருக்கிறார்கள். ஏறத்தாழ 8 மில்லியன் அமெரிக்கர்கள் மட்டும் இந்த அனுபவத்தினைப் பெற்றிருப்பதாக ஆய்வுகளிற் குறிப்பிடப்படுகிறது.

ஆன்மீக ரீதியிற் கருதப்படும் இந்த அனுபவத்தினைக் குறித்து விஞ்ஞானிகளும் அதிக கவனம் செலுத்தவே செய்கிறார்கள். இந்த அனுபவமானது உயிரியல் ரீதியாக அதிக வயதான மூளையின் கலங்களில் ஏற்படுகின்ற ஒரு மாற்றத்தின் தாக்கமே என்று குறிப்பிடப்பட்டாலும் இது பரீசோதனை மூலமாக விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்படாத ஒன்றே.

இந்த அனுபவத்தினைக் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் உளவியலாளர்கள் இது மனதில் தோன்றும் ஒரு மாயத்தோற்றமாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் இக்கூற்றானது சரியாக இருப்பதற்கான சந்தர்ப்பங்கள் மிக அரிதாகவே அமைந்துள்ளது.

மரணத்தினை அண்மித்தவர்களின் அனுபவங்கள் பல்வேறு ஒற்றுமைகளோடும் வேற்றுமைகளோடும் காணப்பட்டாலும் மத ரீதியான, விஞ்ஞான ரீதியான, உளவியல் ரீதியான பல்வேறு விளக்கங்கள் தரப்பட்டாலும் இன்றைய அறிவியல் மட்டத்தில் இன்னும் விரிவாக ஆராயப்பட வேண்டிய சர்ச்சைக்குரிய ஒன்றாகவே இது காணப்படுகிறது.

அடுத்த இதழில் மரணத்தில் இருந்து மீண்ட அனுபவங்கள் தரப்படும்..

## இந்தவார இலங்கை

# செய்தித் தொகுப்பு

## 30.12.2004

சுனாமி பேரனர்த்தங்களினாற் பாதிப்புக்குள்ளான தமது தமிழீழ மக்களுக்குத் தாராளமாக உதவுமாறு உலக நாடுகளிடம் தேசியத்தலைவர் பிரபாகரன் கோரிக்கைவிடுத்ததுடன், அவசர நிவாரண நடவடிக்கைகளுக்குத் தமிழீழத்தேசியத் தலைவரின் நிதியிலிருந்து 30 கோடி ரூபா பகிர்ந்தளிக் கப்பட்டதாக நிதர்சனம் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

நிவாரப்பணிக்கான உயர் குழுவிற் பங்குபற்றப் புலிகளுக்கு அரசு விடுப்பு.

## 31.12.2004

புலிகள் பகுதியில் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் அரசு தரப்பும் இணைந்து நிவாரணப்பணிக்கு இணக்கம் என்றுதமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்த்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நோர்வேயின் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் 30-12-2004 கிளிநொச்சிக்குச் சென்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சுப. தமிழ்ச்செல்வனுடன் ஒரு மணி நேரம் பேச்சு நடத்தினார்.

இயற்கை அனர்த்தத்தினால் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக துக்கதினம் யாழ். குடாநாட்டில் அனுஷ்டிக்கப்பட்டது.

மலையகத்தில் இருந்து கிளிநொச்சிப் பகுதிக்கு உதவிப் பொருட்களை மலையக மக்கள் முன்னணித் தலைவர் பொ. சந்திரசேகரன் கிளிநொச்சியில் வைத்துத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளார்.

கோதுமை மாவிற்கான தட்டுப்பாடு காரணமாகப் பாண் தயாரிப்பதனை நிறுத்தவேண்டாம் என வெதுப்பகங்களுக்கு அவசர வேண்டுகோள்.

இயற்கை அனர்த்தங்களினாற் பாதிக்கப்பட்ட இடங்களில் மிதிவெடிகளின் அபாயம் இருப்பதால் மக்களை அவதானமாக இருக்குமாறு யாழ். மாவட்ட மிதிவெடி அகற்றும் செயற்பாட்டு அலுவலகம் கேட்டுள்ளது.

பரந்தன் பிரதேசத்தில் உள்ள உமையாள்புரப் பகுதியிற் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதால் மக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாக்கப் படுகின்றார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அபிவிருத்திச் செயலகம் விடுத்துள்ள உதவிக்கான கோரிக்கையை நிறைவு செய்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

## 01.01.2005

வடக்கு, கிழக்குக்கு உரிய உதவிகளைப் பெறுவதற்கு வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்திக்கத் தமிழ் கூட்டமைப்பு எம்பிக்கள் முடிவு.

அனர்த்தத்தினாற் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் படையினர் வழங்கிய உழுத்த அரிசியைப் பருத்தித்துறைப் பிரதேச செயலாளரின் தலையில் மக்கள் கொட்டினார்கள்.

யாழ். குடாநாட்டிற்கு ஐந்து கோடி ரூபா நிதி அரசு அனுப்பியதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் ஆர்.பி. சந்திரசேகர் தெரிவித்தார்.

## 02-01-2005

சுனாமி நிவாரணப் பணிகளுக்கு ஹெலிகள், படகுகள், விமானம் சகிதம் அமெரிக்கக் கடற்படையினர் 1500பேர் இலங்கைக்கு வர ஆயத்தம்.

வவுனியா மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய கணேஷ் இடமாற்றம் செய்யப்பட்டு யாழ்ப்பாண அரச அதிபராகக் கடமையேற்றார்.

அனர்த்தத்தினாற் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சிகிச்சையளிக்க 3 விமானங்களில் மருத்துவர்களுடன் கொரிய டாக்டர்கள் யாழ். வருகை.

ஒரு மாதச் சம்பளத்தை வழங்கி உதவுமாறு, இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கம் ஆசிரியர்களுக்குக் கோரிக்கை விடுத்தது.

சுவாச நோய்கள் பரவக்கூடும் என முகாம்களில் உள்ளோர் கவனமாக இருக்குமாறு சுகாதாரசேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## 03.01.2005

அமெரிக்கப்படைகளின் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகள் இந்தியாவுக்குப் பெரும் சீற்றத்தினை உண்டுபண்ணி இருப்பதாக ராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவை அழைப்பது ஜனாதிபதியின் கபடராஜ தந்திரம் என ரெலோ குற்றம் சாட்டியிருக்கிறது.

நடுக்குடத்தனை நலன்புரி முகாமைச் சீருடையினர் எரித்து அட்டகாசம் செய்ததுடன், தொண்டர்கள் உட்படச் சிலரும் தாக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்திற் பயிற்சிபெற்ற 45 பட்டதாரிகளுக்கு முதற்கட்ட நியமனம் வழங்கப்படுவதுடன் கடமையை உடனடியாகப் பொறுப்பேற்கவும் பணிப்பு.

## 04.01.2005

புலிகள் பிரதேசத்தில் நிவாரண நடவடிக்கைகளைப் புலிகளிடமே ஒப்படைக்கும்படி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு.

இந்தியா, அமெரிக்கா, பிரிட்டிஷ், பாக்கிஸ்தான், பங்களாதேஷ் உட்பட பல நாடுகளின் துருப்புக்கள் மீட்புப் பணி என்ற பெயரில் இலங்கைக்கு வருகை.

## 05.01.2005

சுனாமி தாக்கத்தினாற் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் நிலைமையினை நேரில் கண்டறிய ஐ.நா செயலாளர் கோபி அனான் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். புலிகளின் பகுதிகளுக்கும் செல்வார்.

அனர்த்தத்தினாற் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சர்வதேச உதவிகள் சரியான முறையிற் கிடைக்கக் கூட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென திரு. சுப. தமிழ்ச்செல்வன் நோர்வே தூதுவரிடம் வலியுறுத்தல்.


**தமிழ் மின்னல் 14.01.2005 அடுத்த இதழில்**

1. உலகைக் கலக்கும் உயிரியல் ஆயுதம் - ஆந்திரக்ஸ்
2. மரணத்திலிருந்து மீண்டவர்களின் நேரடி அனுபவங்கள் - உண்மைச்சம்பவம்
3. அன்றாட வாழ்விற்கான அடிப்படைச் சட்டங்கள்
4. மனித வாழ்வில் தீர்மானங்கள்
5. தெரிந்த மனிதரும் தெரியாத தகவல்களும்
6. பொங்கு தமிழ் - ஓர் அலசல்
7. GPS அடுத்த போரில் மிகப்பெரிய ஆயுதம்
8. மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

மேலும் ஆய்வு, செவ்வி, கதம்பம், குறுக்கெழுத்துப்போட்டி, ரூபா 50000 இற்கான பொது அறிவுப் போட்டி, ஆங்கிலக் கல்வி, கண்களை ஏமாற்றும் படங்கள், மூளைக்கு வேலை, குழந்தைகளுக்கான பக்கங்கள், பார்த்ததும் படித்ததும், இன்னும் ஏராளம்.

உங்கள் பிரதியைத் தவறாது பெற்றுக்கொள்ள இன்றே சந்தாதாரர் ஆகுங்கள். பார்க்க : பக்கம் 48

# இந்த வார உலகம்

## 05.01.2005

**கடற்கோள் எச்சரிக்கை நிலையத்தை 125 கோடி செலவில் இந்தியா அமைக்கும்**

கடற்கோள் எச்சரிக்கை மையம் நிறுவ இந்தியா துரித நடவடிக்கை எடுக்கும் என்றுஅறிவியல் தொழில்நுட்பம் மற்றும் கடல் மேம்பாட்டுத்துறை அமைச்சர் கவில்சீவல் தெரிவித்தார். இது இரண்டரை ஆண்டுகளிற் செயற்படத்தொடங்கும்

**ஈராக் கார்க்குண்டுக்கு 7 பேர் பலி**

பக்தாத்தின் ஈராக் பிரதமர் இயாது அல்லாவின் கச்சி அலுவலகத்திற்கு அருகே கடந்த 3ம் திகதி நடந்த கார்க்குண்டு வெடிப்பில் 2 பொலிசார் உட்பட 3 பேர் பலி, 25 பேர் காயமடைந்துள்ளனர்.

**இலங்கைத் தமிழருக்காக லண்டனில் உண்டியல் குலுக்கிய ஐரோப்பிய எம்.பி**

இலங்கையின் இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்ட அழிவுக்கு உதவி செய்யும் நோக்குடன் ஐரோப்பிய பாராளுமன்றத்தைப் பிரதிநிதிப்படுதும் நோவேட் ஈவன்ஸ் லண்டனில் வீதி வீதியாக நிதி சேகரிப்பதில் ஈடுபட்டார்.

**இந்திய தென்கிழக்குக் கடற்பகுதியை 50 ஆண்டுகளுக்குச் சுனாமி தாக்காது.**

அடுத்த 50 ஆண்டுகளுக்கு இந்தியாவின் தென்கிழக்குக் கடற்கரை பகுதியைச் சுனாமி அலைகள் தாக்கும் அபாயம் இல்லையென்று I.I.T பேராசிரியர் யோகேந்திர சிங் கூறியுள்ளார்.

## 04.01.2005

**ஐ.நா. செயலாளர் நாயகம், கோபி அனான் ஆசிய நாடுகளுக்கு விஜயம்**

ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் பூகம்பப் பேரழிவாற் பாதிக்கப்பட்ட ஆசிய நாடுகளுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். இலங்கை வருவதாகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.எம் டிக்ஷிற் காலமானார்.**

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.எம் டிக்ஷிற் 03.01 அன்று புதுடில்லியில் மாரடைப்பால் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 68.

**நேபாளத்தில் தீவிரவாதிகளின் தாக்குதலில் 12 இராணுவத்தினர் பலி**

நேபாளத்தில் தீவிரவாதிகளின் தாக்குதலில் 12 இராணுவத்தினர் பலி. 10 பேர் காயம். நேபாளத்தில் உள்ள மால்போஸ் என்ற கிராமத்துக்கு அருகே இராணுவ வீரர்கள் ரோந்து சென்றுகொண்டிருந்த வாகனங்கள் மீது தீவிரவாதிகள் குண்டு வீசித் தாக்கியுள்ளனர்.

**பாகிஸ்தான் அதிபருக்கு எதிராகக் கறுப்புத்தினம் அனுஷ்டிப்பு**

பாகிஸ்தான் அதிபர் பார்வேல் முஷாரப்புக்கு எதிராகச் சென்ற முதலாம் திகதி அந்நாட்டு எதிர்க்கட்சியினர் கறுப்பு தின அனுஷ்டிப்புச் செய்தனர். இதனை ஒட்டி ஊர்வலமும் பேரணியும் நடாத்தினர்.

**02.01.05**

**கடற் கொந்தளிப்பினால் 7000 உல்லாசபயணிகள் காணமல்போயினர்.**

இந்து சமுத்திரத்தில் மார்கழி 26ம் திகதி கடற் கொந்தளிப்பின் பின்னர் இப் பிராந்தியத்தில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் காணமல்போனதாக தெரிவிக்கப்படுகின்றது.

**பூமி வேகமாகச் சுற்றுவதுடன் சரிந்தும் உள்ளது, பூகம்பத்தின் விளைவு என விஞ்ஞானிகள் அறிவித்தனர்.**

ஆசியாவில் கடந்த 26ம் திகதியில் ஏற்பட்ட பாரிய பூமி அதிர்சியினாற் பூமியின் சுழற்சி வேகம் அதிகரித்துள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதனால் ஒரு நாளில் நேர அளவு செக்கனிற் சில பகுதிகளினாற் குறைவடைந்துள்ளதாகப் பூமியின் அச்சு ஏறத்தாழ 1 இஞ்சியின் அளவு சாய்ந்துள்ளதாகவும் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா வின் பூகோள பௌதிகவியலாளரான றிச்சாட் குலோஸ் தெரிவித்துள்ளார்.

**02.01.2005**

**கலை நிகழ்ச்சியில் தீ விபத்து. 169 போர் பலியாகினர்.**

ஆஜந்தீனாவில் புவனஸ் அயர்ஸ் பகுதியில் டிஸ்கோ நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தில் ஏற்பட்ட விபத்தில் 169 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக் கானோர் காயமடைந்தனர்.

**தாய்லாந்தில் சுனாமியினால் 2 லட்சம் போர் வேலை இழப்பு.**

தாய்லாந்து நாட்டின் சுற்றுலாப் பகுதிகள் கடற்கொந்தளிப்பாற் பாதிக்கபட்டதால் 2 லட்சம் பேருக்கு வேலை இல்லாமல் போய்விட்டது.

**சவூதியிற் குண்டுவெடிப்பு 12 பேர் படுகாயம்**

சவூதி அரேபியாவில் உள்ள உள்துறை அமைச்சுக் கட்டிடத்திற்கு வெளியே குண்டு வெடித்ததில் 12 பேர் படுகாயம் அடைந்தனர்.

**சுனாமி பாதிப்பால் சார்க் மகாநாடு ஒத்திவைப்பு**

கடற்கொந்தளிப்பால் தென்கிழக்காசிய நாடுகளில் பல்லாயிரம் பேர் பலியானதால் டாக்காவில் நடைபெறவிருந்த சார்க் உச்சி மகாநாடு ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

# இந்த வார விளையாட்டுக் களம்

தென்னாபிரிக்கா, இங்கிலாந்து அணிகளுக்கிடையில் கேப்ரவுனில் நடைபெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து தனது முதல்இனிங்சில் அனைத்து விக்கெற்றுக்களையும் இழந்து 163 ஒட்டங்களைப் பெற்றது.

சிட்னியில் நடைபெற்று வரும் அவுஸ்ரேலியா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் அவுஸ்ரேலியா அணி தனது முதல் இன்னிங்சில் 568 ஒட்டங்களைக் குவித்து. இதில் றிக்கி பொன்டிங் இரட்டைச் சதத்தையும் கில்கிறிஸ்ட் சதத்தையும் பெற்றனர்.

கடற் கொந்தளிப்பில் முரளி மயிரிழையில் உயிர் தப்பினார். காலி நகரில் சம்பவத்தின் அன்று முரளிதரன் ஒய்வெடுத்து வந்தார். கொந்தளிப்பு எற்படுவதற்கு 10 நிமிடத்திற்கு முன்பதாக அந்த இடத்தை விட்டுக் கிளம்பிச் சென்றுள்ளார் அவர் கிளம்பிய அடுத்த சில நிமிடங்களில் அந்த இடத்தைப் பெரும் கொந்தளிப்புத் தாக்கியது. இதனால் அந்தப் பகுதி இருந்த இடம் தெரியாமற் போய்விட்டது. இது பற்றித் தெரிவித்த முரளி நான் உயிர் தப்பியது கடவுள் செயல் எனவும் கூறினார்.

சுனாமி கடற்கொந்தளிப்பாற் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரணத்துக்காக கல்கத்தா வீதிகளில் இறங்கி நிதி திரட்டுகிறார் இந்திய கிறிக்கற் தலைவர் சௌரவ் கங்குலி.

அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களை சந்திப்பதற்காக இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் யாழ். வந்து சென்றார்.

மூன்று நாடுகள் பங்கேற்கும் ஒருநாள் கிறிக்கற் தொடரில் பங்கேற்பதற்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அவுஸ்ரேலியா சென்றது.

கடற் கொந்தளிப்பாற் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நிதி திரட்டுவதற்காக 10ம் திகதி ஆசிய லெவன், ஐ.சி.சி லெவன் அணிகளுக்கிடையேயான இரண்டு ஒருநாள் கிறிக்கற் போட்டிகள் நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் கிடைக்கும் தொகையை நிவாரண நிதியாக வழங்கப்படவுள்ளது.

2004ம் ஆண்டு டெஸ்ட் கிறிக்கற் போட்டியில் 74 விக்கற்றுக்களைக் கைப்பற்றி இந்திய வீரர் அனில் கும்பிளே முதலிடத்தில் உள்ளார். ஓட்டங்கள் குவிப்பதில் அவுஸ்ரேலியா வீரர் லாங்கர் முதலிடத்தில் உள்ளார். அவர் கடந்த ஆண்டு 5 சதங்கள் உட்பட மொத்தம் 1481 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

**ஆங்கிலம் கற்போம்**

# ஆங்கிலம் கதைப்பது இலகுவானது!

SAAMSTECH இன் புதிய முறையிலான பாடநெறியானது வரும் 2006 ஆண்டிற்கு முன் இலங்கையில் முழுமையான ஆங்கில அறிவினை விருத்தி செய்யும் நோக்கோடு உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரையுள்ள ஆங்கிலக் கற்கை நெறியிலிருந்து வேறுபட்டு, குழந்தைகள் தாய்மொழியினைக் கற்பதனை அடிப்படையாகக் கொண்ட, மொழிக் கற்கைநெறிக்கான ஆய்வுகளின் மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு மொழியினைக் கதைத்தல் என்பது இலகுவான ஒரு செயற்பாடாகும். ஒரு மொழியின் எழுத்துக்கள் மற்றும் இலக்கணம் என்பன தெரிந்து கொள்வதற்கு முன்பாகவே ஒரு குழந்தை ஒரு மொழியினைக் கதைக்கிறது. அதாவது அந்த மொழியின் சில சொற்களையும் சில அடிப்படையான வசன அமைப்புக்களையும் மட்டும் தெரிந்து கொண்டு ஒரு குழந்தையினால் ஒரு மொழியினைக் கதைக்க முடியுமாயின் அதைவிட அதிகமான சொற்களையும் வசன அமைப்புக்களையும் முன்னதாகவே தெரிந்து வைத்திருக்கிற நாம், மிக இலகுவாக ஆங்கிலத்தினைக் கதைக்க முடியும். நாம் இதுவரை ஆங்கிலம் கதைக்க முடியாமல் இருப்பதற்கான காரணம் இதுவரையிருக்கின்ற தவறான கற்பித்தல் முறையே. ஒரு மொழி முதலிற் கதைக்கப்படவேண்டும். ஒரு மொழியினைக் கதைக்கப்படுவதற்கு முன்பாக இலக்கணம் கற்பிக்கப்படுமாயின் இலக்கணரீதியான சிந்தனை கதைக்க முடியாத நிலையினைத் தோற்றுவிக்கும்.

கதைத்தல் என்பது மிகவும் வேகமான ஒரு செயற்பாடு ஆகும். ஆங்கிலமானது ஏறத்தாழ ஒரு நிமிடத்துக்கு 250-300 சொல் வேகத்திலேயே கதைக்கப்படுகிறது. இலக்கண ரீதியான சிந்தனை மூலம் நிமிடத்துக்கு ஐம்பதிற்கும் குறைவான சொல் வேகத்தில் வசனங்கள் அமைக்கப்படுவதாற் கதைக்கமுடியாத நிலை தோன்றுகிறது.

ஒரு மொழியினைக் கதைத்தல் என்பது இரண்டு விதமான செயற்பாடுகளால் ஏற்படுத்தப்படுகிறது.

1) அடிப்படையான வசனங்களை உருவாக்குதல்.

2) அடிப்படையான வசனங்களை விருத்தியாக்கம் செய்தல்.

SAAMSTECH இன் பாடநெறியானது ஒரு சிலநாட்களில் அடிப்படை வசனங்களிலும் விருத்தியாக்கத்திலும் தேர்ச்சியைக் கொடுக்கிறது. ஆனாலும் வசன உருவாக்க வேகமானது ஆரம்பத்திற் சற்றுக் குறைவாகவே காணப்படும்.

SAAMSTECH இன் நேரடிவகுப்புக்களில் வேகத்தினை அதிகரிப் பதற்கான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. ஒவ்வொன்றும் ஒருமணி நேரம் கொண்ட 48 மணிநேர வகுப்புக்களில் முழுமையாக ஆங்கிலத்தினைக் கதைக்கமுடியும். ஒவ்வொரு அலகுகளிலும் ஒவ்வொரு பாடவிளக்கம் தரப்படுவதோடு அடிப்படையான வசனங்கள் மற்றும் விருத்தியாக்கத்திற்கான பயிற்சிகள் தரப்படுகின்றன.

SAAMSTECH இன் தமிழ் மின்னல் வாராந்த சஞ்சிகையில் ஒவ்வொரு பாடவிளக்கம் தொடர்ச்சியாகத் தரப்படவுள்ளது. இது எழுதுவதற்கேற்ற வேகத்தில் உங்களில் ஆங்கிலமுன்னேற்றம் ஏற்படுத்தும். ஆனாலும் SAAMSTECH இன் கணினிப்படுத்தப்பட்ட பாடநெறிமூலமே முழுமையாகக் கதைக்கமுடியும்.

# Shall, Will

நான் போவேன் , அவர்கள் வருவார்கள் நீங்கள் சாப்பிடுவீர்கள் போன்ற எதிர்கால வாக்கியங்களை அமைக்கும்போது I,We,He,She,They,You போன்ற பிரதிப் பெயர்ச் சொற்களுடன் will, shall போன்ற சொற்களைப் பயன்படுத்தி எதிர்காலம் காட்டப்படுகிறது. இங்கு நாம் சந்திக்கின்ற பிரச்சினை என்னவென்றால் I, மற்றும் We உடன் Will பயன்படுத்தப்பட வேண்டுமா? அல்லது Shall பயன்படுத்தப்பட வேண்டுமா? என்பதும் அதே போன்று He, She, They, You போன்றவற்றுடன் Will பயன்படுத்தப்பட வேண்டுமா? அல்லது Shall பயன்படுத்தப்பட வேண்டமா? என்பதுமாகும். I, மற்றும் We உடன் Shall உடன் பயன்படுத்தப்பட வேண்டும். என்பதும் மற்றவற்றுடன் Will பயன்படுத்தப்பட வேண்டும் என்பதும் இதுவரையுள்ள ஆங்கில வகுப்புக்களிற் கற்பிக்கப்படுகின்ற விடயமாகும். ஆனால் இது அடிப்படையற்ற. தெளிவற்ற ஒரு விளக்கமாகும். Will, Shall என்ற இரண்டுக்கும் இரண்டு வெவ்வேறான அர்த்தங்களும் பயன்பாடுகளும் உள்ளன.

I Will go என்பது நான் போவேன் (வேன்) என்றும் I Shall go நான் போவன் (வன்) என்றும் அர்த்தம் பெறும். இதே போன்று We will play என்பது நாங்கள் விளையாடுவோம் என்றும் We shall play என்பது நாங்கள் விளையாடுவம் என்றும் அர்த்தம் பெறும். Shall அமைப்பானது கேள்வி வசனங்களிலே அதிக அர்த்தமுள்ளதாகக் காணப்படும். Will we go என்றால் நாங்கள் போவோமா? அதாவது எமக்குத் தெரியாத ஒருவிடயமாகவும் Shall we go என்றால் , நாங்கள் போவமா? அதாவது நாங்கள் தீர்மானிக்கிற ஒரு விடயமாகவும் காணப்படும். அதே போன்று Will I go என்றால் நான் போவேனா? என்றும் Shall I go என்றால் நான் போகட்டா? என்றும் அர்த்தம் பெறும்.

Shall என்ற அமைப்புப் பொதுவாக அதிகமான They, He, She, You என்பதுடன் அர்த்தம் பெறாத ஒன்றாக தென்படும். SAAMSTECH இன் பாடநெறியில் விளக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமற் கிரகித்தல் மூலமாகவே தேர்ச்சி தரப்படுகிறது. உண்மையாகவே ஆங்கிலத்தில் கதைக்க விரும்புகிறவர்கள் SAAMSTECH இன் பாடநெறியில் சேரலாம்.

வியாபாரம்

வியாபார நிறுவனம் சம்பந்தமாகப் பாவிக்கப்படும்

# சில சொற்றொடர்கள்

TERMS USED IN BUSINESS ORGANISATIONS

- ஆனந்தவேல் தீபன்

Mean business: - ஏதாவதொரு இலக்கை அடைவதற்காக மும்முரமாக இருத்தல்

Break even: - இலாபமும் நட்டமும் இல்லாதொரு நிலைமை

Blue collar: -உடல் ரீதியான உழைப்பை நிறுவனத்துக்கு வழங்கும் தொழிலாளர்கள்

Growing Pains: - புதிதாக ஆரம்பிக்கப்படும் நிறுவனம் சிரமங்களுக்கும் பிரச்சினைக்கும் முகம் கொடுத்தல்.

Golden hand shake: - ஒரு நிறுவனம் தனது தொழிற்பாடுகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அல்லது வேறோர் தூர இடத்துக்குத் தனது அலுவலகத்தை மாற்றுவதற்காக அல்லது வேறேதும் காரணங்களுக்காகத் தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்குவதற்காக அவர்களுக்கு கொடுக்கப்படும் பெருந்தொகைப் பணம்.

Graveyard shift :- இரவு நேரப் பணிகளில் (உ+ம்-வைத்தியசாலை) ஈடுபடும் தொழிலாளர்கள்

A big fish in a small pond:-முக்கியத்துவம் வாய்ந்த நபரொருவர் சிறிய நிறுவனத்தில் வேலை செய்தல்.

Sign on dotted line:- சட்ட ரீதியாக (ஆவணம் மூலம்) உடன்படுதல்

Dead end:- முன்னேற்றம் காணமுடியாத நிலைமை

Chicken feed :- மிகவும் குறைந்த கொடுப்பனவு

Business is business:-வியாபாரத்தின் நோக்கம் இலாபமேயொழிய இரக்கம் பார்ப்பதற்காக அல்ல.

Ex gratia :-ஒரு நிறுவனம் தொழிற்சட்ட ரீதியாகத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கத் தேவையில்லாத ஆனால் இரக்கப்பட்டுக் கொடுக்கின்ற உதவுத்தொகை.


Ad hoc:-குறித்த ஒரு இலக்கை (குறுகிய கால) எய்துவதற்காக உருவாக்கப்பட்டு அந்நோக்கம் நிறைவேறியதும் கலைந்துவிடும் நிறுவன அமைப்பு.

Checks and balances:- ஒருவர் அல்லது ஒரு குழு நிறுவனத்தில் அளவுக்குமேல் அதிகாரங்கள் கொண்டிருப்பதைக் கட்டுப்படுத்தல்.

Big brother:- பணியாளர்களின் தனிப்பட்ட விடயங்களிலும் தலையிட்டுக் கொண்டு அவர்களை முழுமையாகக் கட்டுப்படுத்தும் நிறுவன அமைப்பு.

**செய்து பார்ப்போமா....**

# குறுக்கெழுத்துப் போட்டி




**இடமிருந்து வலம்**

1.டாம்பீகம்
6.சுத்தியலென்றதும் ஞாபகத்துக்கு வருவது
7.கூற்றுவன்
9.ரதம், திரும்பியுள்ளது
10. வாழ்வின் முடிவு
11. தானிய வகைகளில் ஒன்று
12. சிலை, பெண்ணுக்கும் சொல்வதுண்டு
13.ஒரு கூட்டத்தை வழிநடத்துபவள்
15. இதுக்கு யாருக்குத்தான் பயமில்லை
16. தன்மானமுள்ளவர்கள் விரும்பாதது (திரும்பியுள்ளது)
18. இதைத் தேடிக்கொள்வதென்பது இலகுவான ஒன்றல்ல
19. ஒரு கனி

**மேலிருந்து கீழ்**

1. ஒரு குறிப்பிட்ட நேர இடைவெளி
2. சம்மதத்தின் சொல் திரும்பியுள்ளது
3. அலுவலகம்
4. இடத்துக்கு இடம் செல்லும் செயற்பாடு. திரும்பியுள்ளது
5. வினாவும் சொல்
8. ஜலதோசத்தின் வெளிப்பாடு-வெளிப்பட்ட வேகத்தில் குழம்பியுள்ளது
11. அது அவருடைய .......நாம் என்ன செய்ய. திரும்பியுள்ளது
14. பால் உணவு.
15.....செய்வது தப்பு
17. மாமியின் கணவனின் பிள்ளையின் தகப்பன்
18. இதன் உச்சியிலே நின்று பேய் ஒன்று ஆடுமா, என்ன? நம்பாதீங்க. கடைசி எழுத்து விடுபட்டுள்ளது.

முதலிற் சரியான பதிலினை அனுப்பும் மூவருடைய பெயர், விபரம் அடுத்த இதழிற் பிரசுரமாகும்.

# கணனி வைரஸ்

கம்பியூட்டர் வைரஸ் என்பது நுண்கிருமியல்ல. இது ஒரு வகைக் கம்பியூட்டர் புரோகிராம் (PROGRAM) ஆகும். இவை எந்தவிதமாகவோ வெளித்தெரியாமற் பல்கிப்பெருகிப் பரவக்கூடியது. இவை கம்ப்யூட்டரில் உள்ள இயக்க முறைகளையும் பிரயோகங்களையும் பாதிக்கின்றது. மேலும் கம்பியூட்டர் கோப்புகள், மெமரி, பூட்செக்டர், மதர் போர்ட், இல் உள்ள BIOSS SOFTWARE போன்றவை இவற்றால் பாதிக்கப்படுகின்றன. வைரஸ் என்றால் கம்பியூட்டர் துறையைப் பொறுத்த மட்டில் தவறான நோக்கத்திற்காக, அழிவிற்காக உருவாக்கப்படும் ஒரு புரோக்கிராம் ஆகும். அதாவது இந்த புரோகிராம் மற்ற புரோகிராம்களை அழிப்பதற்காக எழுதப்படுகின்றது. இந்த புரோகிராமினால் வைரஸ் வராமல் தடுப்புப் புரோகிராம்களை (ANTIURUS SOFTWARES) உருவாக்குபவர்கள் மட்டுமே நல்ல நோக்குடன் உருவாக்குகின்றனர். முதன் முதலில் போராசிரியர் பிரெட் கோகென் (FRED COHEN) என்பவர்தான் இப்படி பாதிப்பை ஏற்படுத்தும் செயல்திட்ட வரைவுகளை வைரஸ் என்று அழைத்தார்.

## கணனி வைரஸ்கள் எப்படிப் பரவுகின்றன ?

கம்பியூட்டர் வைரஸ் பாதிக்கப்பட்ட ஃபிளோப்பி டிஸ்க்கின் (FLOPPY DISK) மூலமோ லோக்கல் ஏரியா நெட்வோர்க் (LOCAL AREA NETWORK) மூலமோ அல்லது இலத்திரனியல் அஞ்சல் (E-Mail) இணையம் (INTERNET) மூலமாகவோ இவை கணனிக்குள் செல்கின்றது. சட்டவிரோதமாகப் பிரதி செய்யப்படும் (SOFT-WARE PIRACY) மென்பொருட்களும் (SOFTWARE) வைரஸ்கள் பரவத் துணையாக உள்ளன.

வைரஸ்களைக் கண்களாற் பார்க்கமுடியாது. அவை கோட்களில் (CODED) வரிசைக்கிடையில் மறைந்திருக்கும். டிஸ்க்கில் போட் செக்ரர் (BAD SECTOR) என்று சொல்லப்படும் பகுதியில் இருக்கும். இவற்றை வைரஸ் எதிர்ப்புப் புரோகிராம் மூலம் முற்றிலுமாக நீக்கலாம். வைரஸ் என்ன செய்யும் என்பதற்கு இதுவரை எது விதவரை முறையும் கிடையாது. கணக்கிடும் செயலைத் தாமதமாக்கலாம், தவறாக்கலாம், அதிகமாக்கலாம் அல்லது குறைக்கலாம், கம்பியூட்டரைச் செயலிழக்கச் செய்யலாம், ஹார்ட்டிஸ்கில் (HARD DISK) உள்ள தகவல்களை அழிக்கலாம்.

## வைரஸ் பாதித்தாற் காணப்படும் அறிகுறிகள்

1 புரோகிராம் லோட் (PROGRAM LOAD) ஆக வழக்கத்தை விட அதிகநேரம் எடுக்கும்.
2 டிஸ்க்களில் உள்ள கோப்புகளை திறக்க அதிகநேரம் எடுக்கும்.
3 ஏதாவது வேறுபாடான கோப்புகள் காணப்படும்.
4 புரோகிராமின் அளவு அதிகமாகிக் காணப்படும்.

## கம்பியூட்டர் வைரஸ்களின் சில வகைகள்.

1 பூட் செக்ரர் வைரஸ் (BOOT SECTOR VIRUS)
2 பாட்டிஷன் வைரஸ் (PARTITION VIRUS)
3 ∴பைல் இன்∴பெக்டர் (FILE INFECTOR)
4 ரோஜன் ஹோர்ஸ் வைரஸ் (TROJAN HORSE VIRUS)
5 வொம்ஸ் (WORMS)
6 டொர்ப்பர் (DROPPERS)

## சில கம்பியூட்டர் வைரஸ்களின் பெயர்கள்

1 பிளட் சுகர் (Blood Sugar)
2 கட்மான் (catman)
3 சிஐஏச் (CIH / Chenopy)
4 டயானா (Diana)
5 லவ்பக் (Lovebug)
6 மெலிஸ்ஸா (Melissa)

## கம்பியூட்டர் வைரஸ்களை அழிக்கும் அல்லது அகற்றும் முறை

வைரஸ் போன்ற நுண்கிருமிகளின் தொற்றுக்குள்ளான ஒருவருக்கு, நிவாரண மருந்து வழங்கிக் குணப்படுத்துவதைப் போன்று வைரஸ் பாதித்த கம்ப்யூட்டருக்கு மருந்து கொடுக்கின்றோம். இங்கு மருந்து என்பது வைரஸ்களை அழிக்கக்கூடிய ஒருவகை கம்ப்யூட்டர் புரோகிராம் ஆகும். கம்ப்யூட்டர் வைரஸ் நமது கணனிப்பொறியைத் தாக்காத வண்ணம் முன்னதாகவே தடுப்பதற்காக ஒவ்வொரு முறையும் பணிசெய்யத் தொடங்கும்போது வைரஸ் எதிர்ப்புப் புரோகிராம்களை (ANTI VIURS VACCINE PROGRAMS) கணனிக்குள் செலுத்தினால் 90% கணனியைப் பாதிக்காமற் பாதுகாக்கலாம். இவ்வித வைரஸ் தடுப்பு புரேகிராம்கள் கம்ப்யூட்டர் சந்தையில் நிறையவே கிடைக்கின்றது.

உதாரணமாக, வொச்டோக் (Watch dog) டொக்டர் சொலமன்ஸ் ரூல்கிற் (Dr. Soloman's ToolдKit) நோட்டன் அன்ரி வைரஸ் (Norton Antivirus) பிசி கில்லின் (PC Cillind) பிசி ஸ்கான் (McAfee Virus Scan) போன்ற தடுப்பு புரோகிராங்களை நாம் கைவசம் வைத்திருந்தால் வைரஸ் பற்றிய கவலையின்றி கம்ப்யூட்டரை இயக்கலாம்.

## கணனியில் வைரஸ் வராமல் தடுக்கச் சில வழிகள்

1 புரோகிராம்களை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்தே வாங்கவேண்டும்.
2 நமது கம்ப்யூட்டரை அந்நியரெவரும் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது.
3 மற்றவர் பாவித்த ∴பிளோப்பி, டிஸ்க் போன்ற சாதனங்களை நாம் பயன்படுத்தக் கூடாது. கட்டாயம் பயன்படுத்த வேண்டிய சந்தர்ப்பத்தில் அன்ரி வைரஸ் புரோகிராம் (Antivirus) ஊடாக உறுதிப்படுத்திய பின் பயன்படுத்தவேண்டும்.
4 வைரஸைத் தடுத்து அழிக்கும் புரோகிராம்களை வைத்திருத்தல் வேண்டும்.
5 மாதத்திற்கு ஒரு முறையாவது உங்கள் சிஷ்டத்தை ஸ்கான் செய்யுங்கள்.
6 வைரஸ் நீக்கப்படாத புரோகிராமை சிஷ்டத்துள் அனுமதிக்காதீர்கள்.
7 இலத்திரனியல் அஞ்சலில் வருகின்ற புதுவிதமான கவர்ச்சிகரமான இலத்திரனியல் கடிதங்களை திறந்து பார்க்காமல் அழித்துவிடுங்கள்.

## கணனியில் தெரிந்துகொள்ள சில

# சொல் விளக்கங்கள்

**மென்பொருள் (SOFTWARE)**

கணனி இயக்கத்திற்கு உதவும் செயல்திட்டங்கள், நெறிமுறைகள், செயற்பாட்டு விதிகள் போன்றவை.

**வன்பொருள் (HARDWARE)**

கணனியின் இயந்திர அமைப்பு சிலிக்கன் சிப்கள், டிரான்ஸ்போர்மர்கள், போர்ட்டுகள் மற்றும் வயர்கள் போன்றவை.

**மின்னஞ்சல் (E-Mail)**

இணையத்தில் பரிமாறப்படும் அஞ்சல், இணையப்பாவனையாளர்கள் இலவசமாகப் பயன்படுத்தும் இவ்வசதியில் ஒரு மடலை ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கு ஒரே நேரத்தில் அனுப்பும் வசதியும் உண்டு.

**ஃபிளாஷ் நினைவகம் (FLASH MEMORY)**

தற்போதைய உள்ளங்கைக் கணனிகள், தனிக் கணனிகள், மடி கணனிகள் ஆகியவற்றில் தகவல்களை நிரந்தரமாகச் சேமிக்க இவ்வகை நினைவகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஏனைய நினைவகங்கள் போலன்றி இவற்றில் மின்னிணைப்புத் துண்டிக்கப்படும் நேரத்திலும் தகவல்கள் அழிக்கப்படுவதில்லை. அவற்றின் வேகம் ஏனைய ரொம்களை விடக் குறைவானதே. என்றாலும் இதை நிரந்தரச் சேமிப்புக் கருவிகளோடு ஒப்பிடுகையில் அதிவேக சேமிப்புக் கருவியாகவே கருதப்படுகிறது. தற்போது வெளிவந்துள்ள டிஜிட்டல் கமராக்கள், குரல்பதிப்பான்கள் போன்றவற்றிலும் இவ்வகை நினைவகத்தைப் பயன்படுத்துகின்றனர்.

**உலக இணையத் தளம் (World Wide Web)**

இது இணையத்திற் பாவிக்கப்படும் ஒரு தொழில்நுட்பமாகும். இதன் மூலம் பல வலையமைப்புக்களுக்கு உட்படுத்தப்பட்ட கணனிகள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு வலைப்பின்னல் அடிப்படையில் தொழில் புரிகிறது. இது எமக்குத் தேவையான ஒரு வெப்தளத்திற்குச் செல்ல உதவுகிறது. இது சுருக்கமாக WWW என அழைக்கப்படுகிறது.

கணனி பற்றிய

# கேள்வி பதில்கள்

1. எனது கம்ப்யூட்டரை காலையில் ஒன் (On) செய்தால் பூட் (Boot) ஆகாமல் எறர் மெசேஜ் வருகின்றது, ஹார்ட்வெயார் கன்ஃபிகரேஷன் (Hardware Configu ration) சரியாக இல்லை யென்று கம்ப்யூட்டரை மறுபடியும் ஒன் செய்து செற்றப் (Setup) இற்குச் சென்று வேண்டிய ஹார்ட்வெயார் செற்றிங்களைச் செய்தால் கம்ப்யூட்டர் நன்றாக இயங்குகின்றது. அடுத்த நாள் கம்ப்யூட்டரை ஒன் செயதால் மறுபடியும் கம்ப்யூட்டர் இயங்க மறுக்கின்றது. மீண்டும் செற்றப்பிலுள்ள செற்றிங்குகளைச் செய்ய வேண்டியுள்ளது. இப்பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க வழி என்ன ?

உங்கள் கம்ப்யூட்டரின் சீமோஸிற்கான பற்றரி வீக்காக (Week) உள்ளது. இதனை மாற்றினால் உங்களது பிரச்சினை தீர்ந்துவிடும். ஹாட்வெயார் செற்றிங்கள் சீமோஸின் நினைவகத்திற் பதியப்பட்டிருக்கும். சீமோஸிற்குத் தேவையான மின்சக்தியைப் பற்றரி வழங்குகின்றது. இந்தப் பற்றரி வீக்கானால் உங்களின் கம்ப்யூட்டரில் என்ன ஹார்ட்வெயார்கள் உள்ளன என்ற விபரம் சீமோஸிற்குத் தெரியாமல் போய்விடும். கேசிங்கைத் திறந்து, மதர்போட்டிலுள்ள பழைய பற்றரியைக் கழற்றிவிட்டு, புதிய பற்றரியைப் பொருத்திக் கொள்ளுங்கள்.

2. ஃபைலை செலக்ட் செய்து டிலீட் கீயை அழுத்தியவுடன் செலக்ட் செய்யப்பட்ட ஃபைல் றீசைக்கிள் பின்னுக்குள் (RECYCLE BIN) போகின்றது. அதனை நிரந்தரமாகக் கணனியிலிருந்து அழிக்க, மீண்டும் றீசைக்கிள்பின்னைத் திறந்து டிலீட் செய்ய வேண்டியுள்ளது. வேறு இலகுவான வழி இல்லையா ?

றீசைக்கிள் பின்னிற்குள் அனுப்பாமல், ஃபைலை நிரந்தரமாக அழிக்க, அந்த ஃபைலை செலக்ட் செய்துஷிஃப்ட் கீயை அழுத்திக் கொண்டு டிலீட் கீயை அழுத்துங்கள். ஃபைல் நிரந்தரமாக அழிந்து விடும்.

3. Delete செய்யப்பட்ட ஃபைல்கள், றீசைக்கிள் பின்னிற்குள் செல்கின்றது. இவ்வாறு றீசைக்கிள் பின்னிற்குள் இருக்கும் ஃபைல் ஒன்றை எவ்வாறு மீண்டும் எடுத்துப் பாவிப்பது ?

Delete செய்யப்பட்ட இப்பைல்களை அப்படியே Recycle Bin இற்குள் வைத்துப் பார்வையிட முடியாது. அந்தப்ஃபைலை மீண்டும் நீங்கள் பாவிக்க வேண்டியிருப்பின், றீசைக்கிள் பின்னிற்குள் சென்று அந்தப்ஃபைலைத் தெரிவுசெய்த பின்னர் எடிட் மெனுவிலுள்ள கட் என்னும் கட்டளையைப் பாவித்து கட் செய்து வேறு ஒரு டிரக்ரியிலோ அல்லது டெக்ஸ்டொப்பிலோ Paste செய்து பின்னர் அந்தப் ஃபைலில் டபிள்கிளிக் செய்து பாவிக்கலாம்.

## உங்களுக்குத் தெரியுமா?

# கணனி

1 மெமறியின் அளவை அளப்பதற்குப் பயன்படுத்தப்படும் சிறிய அலகு எது?

2 கணனியிற் பயன்படுத்தப்படும் ஃபுளொப்பி ட்ரைவ் (Floppy Drive) என்பது என்ன?

3 மென்பொருள் என்றால் என்ன?

4 ஒரு மெகா பைட் என்பது எத்தனை கிலோ பைட்?

5 RDBMS என்பதன் விரிவாக்கம் என்ன?

7 HTML என்றால் என்ன?

8 ஃபுளொப்பியிலுள்ள குறித்த ஒரு ஃபைலை மட்டும் அழிக்க வேண்டுமெனில் என்ன செய்ய வேண்டும்?

9 ஒரு இ-மெயிலை அனுப்புவதற்கு என்ன செய்ய வேண்டும்?

10 மைக்ரோசொஃப்ட் எக்ஸெலில் ஒரு நிரலும் (Column) ஒரு நிரையும் (Row) சந்திக்குமிடத்தில் தோன்றும் சதுர வடிவமானது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

11. சாதாரணமாக விண்டோஸில் உள்ள ரீநேம் (Rename) இன் பயன்பாடு என்ன?

12. எக்ஸெலில் ஒரு வேர்க் ஷீற் இல் உள்ள நிரல் (Columns) களின் எண்ணிக்கை எத்தனை?

13. CPU என்பதன் விரிவாக்கம் என்ன?

14. CD என்பதன் விரிவாக்கம் என்ன?

15. ஒரு வேர்ட் ஃபைலின் எக்ஸ்ரென்ஷன் என்ன?

16. கம்ப்யூட்டரிற் பாவிக்கப்படும் கீ போர்ட்டை எதனுடன் இணைக்க வேண்டும்?

17. வின்ஷிப் மென்பொருளைப் பயன்படுத்தி எதனைச் செய்யலாம் ?

18. PDF என்றால் என்ன?

குறிப்பு : பதில்களை எழுதி அனுப்புங்கள். மிகச்சரியான பதில்கள் உங்கள் பெயருடன் அடுத்தடுத்த இதழ்களில் பிரசுரமாகும்.

வாரம் ஒரு விஞ்ஞானி

# சிக்மன் புரோயிட்

**(SIGMUND FREUD –1856-1939)**

1856இல் ஆஸ்திரியாவில் உள்ள பிரிபாக் நகரில் பிறந்த இவர் 1881 இல் மருத்துவத்துறையில் பட்டம் பெற்றார். 10 வருடங்கள் உடலியல் நரம்பியல் துறைகளில் பணியாற்றினார். இவர் உடற்கூற்றியல், உயிரியல், உளவியல் ஆகிய துறைகளில் ஆர்வமுடையவராகத் திகழ்ந்த இவருக்கு உளவியலில் நிறுவிய கோட்பாடுகளும் கலைச்சொற்களுமே புகழ்தேடித் தந்தன.

20ம் நூற்றாண்டில் உளவியல் ஆய்வுகள் மூலம் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார். மரபுரீதியான சிந்தனையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட முறையில் இருவருடைய சிந்தனை இருந்தது. இது உளமருத்துவமுறைக்குரிய உபாயமாகவும், அந்த உபாயத்திற்குரிய பகுத்தறிவு சார்ந்த கோட்பாடாகவும் இருந்தது. இவரது கோட்பாடு இயற்கை, வாழ்வு, மனம் என்பவற்றிற்கு விரிவான விளக்கத்தை கொடுக்கின்றது.

இவர் மனம் என்பதை நனவு உள்ளம் (CONSCIOUS MIND) நனவடி உள்ளம் (PRECONSCIOUS) நனவிலி (UNCONSCIOUS MIND) என மூன்றாக வகுத்து. அதில் நனவிலி உள்ளம் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். இது எவ்வாறு கனவுகளின் உள்ளடக்கத்தைப் பாதிக்கின்றது எனவும் 'கிஸ்தீரியா' போன்ற நோய்களுக்குக் காரணமாகின்றது எனவும் விளக்கியுள்ளார். பாலியல் ரீதியான உணர்விற்கும் சமூகக்கட்டுப்பாட்டிற்கும் இடையே ஏற்படும் மோதல்களை ஆய்வு செய்து மனிதனின் எல்லாப் பழக்கவழக்கங்களும் அடி மனதில் உள்ள பாலியல் ரீதியான ஆசைகளே காரணம் என விளக்கியுள்ளார். இதற்கு உதாரணமாக 'இட்டிபஸ் சிக்கல்' லை (EDIPUS COMPLEX) காட்டியுள்ளார்.

மனநோயைக் குணப்படுத்துவதற்கு இவர் உளப்பகுப்பாய்வு முறையினைக் கண்டுபிடித்தார்.

புறொயிட் மனித ஆளுமையை இட் ID (உணர்வுந்தல்), அகம்,EGO (தன்முனைப்பு) SUPEREGO (அதியகம்) என்ற மூன்று நிலைகளில் விளக்கியுள்ளார்.

புறொயிட் தனது முதுமைக்காலத்தில் வாழ்க்கையை மேம்படுத்தும் உணர்விற்கும் மரணிக்கும் உணர்விற்கும் இடையே உள்ள தொடர்புகளை ஆய்வு செய்தார்.

இவரது கோட்பாடுகளுக்கு எதிராகப் பலத்த வாதப்பிரதிவாதங்கள் எழுந்த போதும் மானுடச்சிந்தனை வரலாற்றில் அவர் உயர்ந்த இடத்தையே பெற்றுள்ளார்.

## இன்றைய விஞ்ஞானம்

# குளோனிங் குழந்தைகளால்

### ஏற்படும் புதிய சர்ச்சைகள்

ஒழுக்கப்பண்பு, மதரீதியான கருத்து முரண்பாடு, மற்றும் விஞ்ஞானிகளது எதிர்வாதங்கள் என்பவற்றைத்தாண்டி குளோனிங் முறையிலான குழந்தைகள் பிறக்கப்போகின்றன எனப் பல விஞ்ஞானிகள் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். இது எங்கே எப்படி நடக்கப் போகிறது? என்பது கூட இரகசியமாகவே உள்ளது. எனினும் குளோனிங்கால் குழந்தை பிறக்கப் போகிறது என்பது உண்மையே.

இதற்கு முன் குளோனிங் குழந்தை ஒன்றைப் பிறக்கவைக்க 62 வயதுப் பெண் ஒருவரின் டீ.என்.ஏ. உபயோகப்படுத்தப்பட்டு அந்த முயற்சி தோல்வி கண்டது. விஞ்ஞானிகள் மலட்டுத்தன்மை கொண்ட பெண் ஒருவருக்கு குழந்தைப்பாக்கியத்தைப் பெற்றுக்கொடுப்பது நல்லதொரு விடயமாகும் என்று கூறினும் இப்பரிசோதனை பெரும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தி இருந்தது.

இந்த நிலையில் மறைமுகமாக பிறக்கப்போகும் குளோனிங் குழந்தைகள் மூலம் மனித இன வரலாற்றிலேயே மாபெரும் கலகங்கள் தோன்றும் எனத் தகவல்கள் இப்போது வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

அதாவது மனித இனத்து மரபணுக்களின் மூலம் மனிதனுடைய பிரதிகளை எடுப்பதே இதன் தொழிற்பாடாகும். இந்த குளோனிங் முறை ஆரம்பத்தில் மனிதனின் அவயவங்களை இணைப்பதிலேயே ஆரம்பிக்கப்பட்டது. இச்செயற்பாடுகளுக்கே மதவாதிகளிடம் இருந்து பெரும் எதிர்ப்புக்கள் தோன்றின. இதனை வைத்தே பிரென்கன்ஸ்டயிஸ் என்ற அபூர்வமான ஒரு வைத்தியரின் பாத்திரம் படைக்கப்பட்டது. இதன் இரண்டாவது செயற்பாடே குளோனிங் முறைக் குழந்தையாகும்.

இம்முறை பற்றிப் பல விஞ்ஞானிகள் குழந்தைகள் இல்லாத இலட்சக் கணக்கான குடும்பங்களுக்குக் குழந்தைச் செல்வம் கிடைக்கும் என்ற கருத்தையே வெளியிட்டனர். இதன்படி பல்வேறு நாடுகளில் உள்ள பல்வேறு திறமைகொண்ட நபர்களினதும் புத்திஜீவன்களினதும் விந்துகள் பல்வேறு நாடுகளிலும் சேகரிக்கப்பட்டுச் சேமிக்கப்பட்டதோடு டீ.என்.ஏ. வங்கிகள் உருவாகி பல கோடிக் கணக்கில் வருமானம் ஈட்டும் வழியாகவும் இது அமைகிறது.

ஒரு வருடத்துக்கு முன்கியன்வில்முட் டொலி எனும் விஞ்ஞானி டொலி எனும் செம்மறி ஆட்டைக் குளோனிங் மூலம் பிறக்கச் செய்தார். இது மனிதனைப்பிரதி எடுக்கும் ஒரு ஆய்வின் கட்டம் என்றே பலர் கருதினர். இது உண்மை தான் என்று நிரூபிக்கும் விதத்தில் இன்று இரகசியமாக மனிதப்பிரதி எடுத்தலின் வளர்ச்சி முன்னேறியுள்ளது.

குளோனிங் என்பது பெண் கருவை எடுத்து அதிலுள்ள அணுக்களை அகற்றி விட்டு அதனை டீ.என்.ஏ. உடன் காய வைத்துப் பின்னர் மின்னியல் அலைகளினூடே சாகஸங்களினூடே மீளவும் செயற்படுத்தித் தயாரித்துக் கொள்ளுகின்ற ஒரு முறையே குளோனிங் முறை எனப்படும். பின்னர் இது மரபணுப்பிரதி எனப்படுகிறது. இம்முறை மிருக உற்பத்திகளிலேயே பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறு குளோனிங் குழந்தைகள் பிறந்தால் மானுடத்துக்கு என்னவாகும் என்பது இன்றுள்ள முக்கிய பிரச்சினையாகும். இது மனிதர்களுக்கிடையே இருந்து வரும் அன்பு, பாசம், கருணை, போன்றவற்றின் இறுதி அத்தியாயத்தைக் கொண்டு வரும் என்றே நம்பப்படுகிறது. இறுதியில் அனைத்துமே மிருக குணமாகி விடும்.

இதுவரை உலகில்இருந்து வந்த கருக்கலைப்புக் குழாய் மூலமான குழந்தைகள் போன்றவற்றால் ஏற்பட்டிருந்த பிரச்சினைகளைக் காட்டிலும் இம் முறை பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக் கூடும். அதாவது ஒரு இரசாயன கூடத்திற் பிறக்கும் குழந்தைகள் மிருகக் குட்டிகளின் நிலைமைக்கு உட்படலாம். என்ற சந்தேகம் பலமாக இருந்து வருகிறது.

மேலும் இதயம் போன்ற முக்கிய அவயவங்கள் ஒரு விற்பனைச் சந்தையை உருவாக்கும் நிலையும் ஏற்படும்.

இந்நிலையிற் குளோனிங் மனிதன் பற்றி நியூயோர்க் ரொக்பொரோல் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பேராசிரியர் பானிபெரிபர் கூறுகையில் இது எதிர்கால உயிரினங்களுக்குப் பெரும் சவாலாகும் என்றுப் பல்வேறு பிரச்சனைகளை உருவாக்கும் என்றும் கூறியுள்ளார்.

எனினும் இதன்போது பயன்படுத்துகின்ற மரபணுக்கள் வேற்று பர்களுடையது என்பதால் இக் குழந்தை தங்களது நிஜமான பெற்றோர்களைக் கண்டுபிடிக்கமுடியாத நிலை ஏற்படக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

எவ்வாறாயினும் விஞ்ஞானிகளாற் கண்டுபிடிக்கப்பட்ட இந்த அபூர்வமான தொழில்நுட்பம் காரணமாகக் குழந்தைகளின் விற்பனைச் சந்தையானது மிருகங்களின் விற்பனைச்சந்தை அளவுக்கு மலிந்து விடக்கூடும் என்பது இவர்களது கருத்தாகும்.

# நீங்கள்

உங்கள் எதிர்காலத்தைக் குறித்து அக்கறை இல்லையெனில்

# இதனை தொடர்ந்து படிக்காதீர்கள்

உங்கள் எதிர்காலத்தைக் குறித்து

# அடுத்தது என்ன?

ஆங்கிலம் கதைக்காமல் இனியும் நாட்களைக் கடத்த முடியாது. ஆங்கிலம் கதைக்காததற்கான காரணங்களை அடுக்குவதிற் பயனில்லை. SAAMSTECH இன் பாடநெறிமூலம் நீங்கள் முழுமையாக ஆங்கிலத்தினைக் கதைக்க முடியும். ஆங்கிலம் இல்லாமல் கணனிக் கல்வியைப் பற்றி யோசிப்பதிலோ, உயர்கல்வியை பற்றி சிந்திப்பதிலோ, திறமைக்கேற்ற வேலைவாய்ப்புகளை எதிர்பார்ப்பதிலோ அர்த்தம் இல்லை.

இன்று இலங்கையில் அதிகமானோர் பயிற்சிபெறும் **SAAMSTECH** இன் ஆங்கில டிப்ளோமா பாடநெறி மூலமாக முழுமையாகக் கதைக்க முடியும் என்பதினால் ஆங்கிலத்தினைக் கதைக்க விரும்பும் ஒவ்வொருவரும் சேரவேண்டியது தவிர்க்க முடியாத ஒன்று.

## இரண்டே மாதங்களில் முழுமையாக ஆங்கிலத்தில் கதைக்க முடியும்

**மேலதிக விபரங்கள் மற்றும் அனுமதிக்கு**

# SAAMSTECH

**841, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். Ph : 021 - 4591571**

## வகுப்புகள் நடைபெறும் இடங்கள்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 841, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாண |
| சாவகச்சேரி: | டச்சு வீதி, சாவகச்சேரி |
| பருத்தித்துறை: | விஸ்வகுல வீதி, பருத்தித்துறை. |
| நெல்லியடி: | கொடிகாமம் வீதி, நெல்லியடி. |
| அச்சுவேலி: | அச்சுவேலி மத்தியகல்லூரி முன்பாக அச்சவே |
| பண்டத்தரிப்பு: | பிரதான வீதி, பண்டத்தரிப் |

மேலும் வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, புத்தளம், மாத்தளை, கண்டி, நீர்கொழும்பு மற்றும் கொழும்பில் ......

**தமிழமுதம்**

ஆங்கில பழமொழிகளுக்குரிய

# தமிழ் பழமொழிகள்

(ஒத்த கருத்தை தரக்கூடிய)

ஆனந்தவேல் தீபன்

Like a bull at a gate:-காய்ந்த மாடு கம்பங்கொல்லையை மேய்வது போல்

Penny wise pound foolish :-கடுகு போன இடம் தேடுவார், பூசணிக்காய் போன இடம் தெரியாது

Face is the index of the mind :- அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

An eye for an eye :- கண்ணுக்கு கண், பல்லுக்கு பல்

Beauty is in the eye of the beholder :- அழகு ஆளுக்கு ஆள் மாறுபடும்

The grass is alwayas greener on the other side of the fence:- இக்கரைக்கு அக்கரை பச்சை

East or west home is best :- எலி வளையானலும் தனி வளை வேண்டும்

Teach your grandmother to suck eggs:-மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுத் தரவேண்டுமா

Familiarity breeds contempt:- பழகப் பழக பாலும் புளிக்கும், நித்தம் போனால் முத்தம் சலிக்கும், கிட்டப்போனால் முட்டப்பகை

Make hay while the sun shines:-காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

Every dog has its day :- ஆனைக்கொருகாலம் பூனைக்கொருகாலம்

Why keep a dog and bark your self :- வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவது போல்

Known devil is better than unknown angel:- தெரியாத தேவதையை விடத் தெரிந்த வேதாளமே மேல்

Be like a bull in the china shop:- வெண்கலக் கடையில் யானை புகுந்தது போல

Castle in the air:- ஆகாயக்கோட்டை கட்டுதல், மணல் வீடு கட்டுதல்

# கதம்பம்

## வாயை மூடுங்கள்

ஒருவன் மாடியில் இருந்து கீழே விழுந்துவிட்டான். மயங்கிய நிலையில் இருந்து அவனை வீட்டுக்குள் தூக்கிச் சென்றார்கள். சிறிது நேரத்தில் ஒரு டொக்டர் வந்து அவனை பரிசோதித்துப் பார்த்து விட்டு 'இந்த மனிதர் இறந்து விட்டார்' என்றார். அடிபட்டவனோ திடுக்கிட்டு விழித்து 'இல்லை டொக்டர் நான் உயிருடன் தான் இருக்கின்றேன்' என்றான். பக்கத்தில் இருந்த அவனுடைய மனைவி 'வாயை மூடுங்கள் டொக்டருக்கு தெரியாதது உங்களுக்கு என்ன தெரியும்' என்றாள்.

## சுனாமி

இழந்தது துணையை,
இழக்காதது உயிரை,
மறந்தது பிள்ளையை,
மறக்காதது சுனாமியை

திருடனின் மனைவி : வெளியே கிளம்பி விட்டீங்களே, எப்போது திரும்பிவருவீங்க.

திருடன் : ஐந்து நிமிடமும் ஆகலாம். ஐந்து வருடமும் ஆகலாம்.

தகப்பன் : ஆபிரகாம் லிங்கன் உன்னுடைய வயதிற் சொந்தமாக உழைத்துக் கொண்டிருந்தார்

மகன் : அது சரி, உங்கள் வயதில் அவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்தார்.

## வட்டி

கட்டி முடிக்கப்பட்டது
வீடு
முடிக்கப்படாதது
வீடு கட்ட வேண்டிய
காசின் வட்டி
இடிக்கப்பட்டது இதயங்கள்,
இடிக்கப்படாதது
சுவாமி அறைச் சுவர்,

## மனைவி அமைவதெல்லாம்

கிரேக்க பேரறிஞர் சோக்ரட்டீஸின் திருமண வாழ்க்கை திருப்திகரமாக அமையவில்லை. திருமணத்தைப் பற்றி அவர் கூறிய கருத்து திருமணத்தை வெறுக்காதீர்கள். அவசியம் கலியாணம் செய்து கொள்ளுங்கள். நல்ல மனைவி அமைந்தால் உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். ஒரு வேளை மோசமான மனைவி அமைந்தால் நீங்கள் தத்துவ ஞானி ஆகிவிடுவீர்கள்.

ஒருவர் : இந்தக் கழுதையோடு எங்கே வாக்கிங் போகிறாய்?

மற்றவர்: டேய், இது கழுதை இல்லைடா, நாய்

ஒருவர் : அது தெரியும், நான் அதனிடம் தான் கேட்கிறேன்.

# நெஞ்சுருக நொடிப்பொழுதில்...

சபீத்தா. S, யாழ் பல்கலைக்கழகம்.

கோடி கோடியாய்க்
கற்பனையுடன் காலையில்
கண்விழித்த என் கண்ணெதிரே
நெஞ்சுருக நொடிப்பொழுதில்
நொந்து நூலாகிப்போன - எம்
சொந்தங்களே - நாம்
கண்டிருக்கவில்லை - உம்
நிலைமாறும் என்று
எண்ணியதொன்று - நாம்
ஏங்கியதின்னொன்று - இனி
என்று எழில்பெறும்
எம் தேசம் நிலைபெறும்
இன்னொரு விடியலுக்காய்
ஏங்கிய வேளைதனில்
பொங்கியதோ கடல்
புரண்டதோ தேசம் - அன்று
ஓயாத அலைகளால்
உயர்வு பெற்ற தாயகத்தை
தீராத அலைகளால் நீ
தீர்த்துவிட்டாயோ?
அன்னை மடிகளும்
பிஞ்சுக்குழந்தைகளும்
துள்ளித்திரியும் எங்கள்
பள்ளிக்குழந்தைகளும்
உன் கொள்ளைப்பசியதற்கு
கொண்டு செல்ல - உந்தன்
தாய்மை உணர்வுக்கு - நீ
தடைச்சட்டம் போட்டதென்ன?

சிறப்புக்கட்டுரை

# காலக் கணக்கீடு

## Time Management

- ரமேஸ் சுதன்

பெரிய பெரிய நிறுவனங்களிற் கையாளப் பெற்று நல்ல பெயரை அடைய உதவுவதில் இன்றியமையாதது காலக் கணக்கீடு. அதாவது டைம் மனேஜ்மெண்ட். நிர்வாகத்துறைக் கல்வியில் இந்த காலக் கணக்கீடு ஒரு முக்கியமான பிரிவாகும்.
வேலைக்குச் செல்லும் பெண்களை விட வீட்டிலேயே இருக்கும் பல பெண்மணிகள் நேரமே இல்லை, ஒரே வேலை என்று அடிக்கடி புலம்புகிறார்கள். இவர்கள் இப்படிக்கூறக் காரணம் காலக் கணக்கீடு இல்லாததுதான்.

நாம் காலத்தை முதலில் மதிக்கத் தெரிந்து கொள்ளவேண்டும். அதாவது காலம் என்பது விலை மதிக்கமுடியாத ஒரு சொத்து. இந்த 24 மணி நேரங்களின் சரியான திட்டமிடல் (Planning) மிக அவசியம். முதலில் நாம் காலத்தை எந்த எந்த வகைகளில் வீணாக்குகிறோம் என்று பார்த்து அதை மாற்றிக் கொள்ள வேண்டும். இது மிக முக்கியம்.

1) **திட்டமிடல் (Planning)**
நாளைய உணவுப் பட்டியலுக்கு வேண்டியதைத் திட்டமிடுவது அதற்கு வேண்டிய பொருட்களை யோசிப்பது இரண்டும் திட்டமிடலில் அடங்கும்

2) **வரிசைப்படுத்திக் குறிப்பெடுத்துக் கொள்ளல்**
அதாவது வாங்க வேண்டிய பொருட்களை எழுதி வைத்துக் கொள்ளுதல். பிறகு கடைக்குச் செல்லும்போது கடைகள் அமைந்துள்ள வரிசைக்குத் தக்கபடி பொருட்களை வரிசைப்படுத்தல். இதனால் அநாவசியமான நடைகளைத் தவிர்க்கலாம். வாங்கி விட்ட பொருட்களை உடனே கடையிலேயே சரி பார்த்து லிஸ்டில் குறியிட்டு விடுவது, நினைவின்றி மறுமுறை அலைவதைத் தவிர்க்கும்.

3) **சக்தியை சேமித்தல்**
வீட்டுக்குள் வேலை செய்வதிலும், வெளியே வேலை செய்வதிலும் ஒரு முறை செல்லும்போது அதிக பட்சமான வேலைகளை முடித்துக் கொள்வது. உதாரணமாக, சமையல் அறையிலிருந்து சாப்பாட்டு அறைக்குச் சென்று உணவு மேசையில் உணவு வகைகளை வைக்க வேண்டுமென்றால், பலமுறை சமையலறைக்கும் மேசைக்கும் நடக்காமற பெரிய தட்டில் உணவுப் பண்டங்களை வைத்து எடுத்துக் சென்று மேசை மீது வைத்தால் நேரமும் சக்தியும் மீதப்படும்.

4) **ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் நிச்சயமான இடம் அமைத்தல்.**

பெரும்பாலான வீடுகளிற் சாவிகளைத் தேடுவது. முக்கியமான வங்கிக் கணக்குப் புத்தகங்களைத் தேடுவது என்பதினாற் பல மணி நேரங்களை வீணாக்குவது உண்டு. இதனால் வெளியே செல்லும் வேலைகள் தடைப்படுவதுடன் வீட்டில் உள்ள உறுப்பினர்களுக்கு மனக் கசப்பு ஏற்பட இடமுண்டு. இதைத் தவிர்த்து நேரத்தை மிச்சப்படுத்த வேண்டும் என்றால் ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் இடம் ஒதுக்கப்படல் வேண்டும். உபயோகப்படுத்திய பின்னர் குடும்ப உறுப்பினர் அனைவரும் எடுத்த இடத்திலேயே திருப்பக் கொண்டு வந்து வைத்து விட வேண்டும். இப்படி ஒரு கட்டுப்பாடான வழக்கம் உருவாகிவிட்டால் தேடல்களைத் தவிர்க்கலாம். நேரத்தையும் மிச்சப்படுத்தலாம்.

5) **பயனுள்ள முறையில் காலத்தை செலவிடுதல்**

நட்பிற் பலரும் பணம் காசு இவற்றில் சிக்கனமாக இருப்பதுபோல அரட்டையில் சிக்கனமாகப் பார்ப்பதில்லை. இந்தப் பேச்சு என்பது ஒரு உள்ளுணர்வுடன் கட்டுப்படுத்தப்பட்டதாக அமையாதவரை அரட்டை நேரம் வீணாகிப் போவதுடன் பயனுள்ள பல செயல்கள் நடைபெறாமல் தடைப்படுவதுண்டு.

எனவே காலத்தைக் கணக்கிட்டுச் செலவு செய்பவர்களும் காலத்தைப் பற்றிய மதிப்பை அறிந்தவர்களும் வெற்றியை அடைந்து மனம் குழப்பமின்றி வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.


# சந்தா விபரம்

தமிழ் மின்னல் வாராந்த சஞ்சிகையினைத் தவறவிடாமல் வீடுகளிற் பெற்றுக்கொள்ள இன்றே சந்தாதாரராகுங்கள்

3 மாதங்கள் : ரூபா 300/- (தபால் செலவு உட்பட)
1 வருடம் : ரூபா 1200/- (தபால் செலவு உட்பட)

பெயர் : ..........................................................................................

முகவரி :..........................................................................................

❑ 3 மாதம் ❑ 1 வருடம் காசுக்கட்டளை இலக்கம் :..........................

திகதி :.......................................... ஒப்பம் :..........................................

காசுக்கட்டளை "தமிழ்மின்னல்" என்ற பெயருக்கு யாழ்ப்பாணம் தபாலகத்தில் மாற்றத்தக்கதாக எடுக்கவேண்டும்.

SAAMSTECH

SAAMSTECH

22 - 1/4, Galle Road, Dehiwala. 011 - 5540200

841, Hospital Road, Jaffna. 021 - 4591571